Registered No. M-4483

Madras War Review { TAMIL 17-12-1943

யுத்த சஞ்சிகை

மலர் IV 1943-ம்ஆ டிசம்பர்மீ 17உ, வெள்ளிக்கிழமை இதழ் 16

ஒரு மகத்தான வேலை

★

இப்போது இந்தியாவின் முக்கியமான இராணுவ வேலை என்ன ? இந்தியா முழுதுமே ஒரு பரந்த தளமாக அமைய வேண்டும். இங்கிருந்து கிளம்பும் படைகள் பாதுகாப்போடும் திறமையோடும் போராட வேண்டும். இது ஒரு மகத்தான வேலை தான். இதன் பொருட்டு நமக்குள்ள எல்லா அறிவையும் பலத்தையும் திரட்ட வேண்டும்.



ஜெனரல் சர் க்ளாட் ஆகின்லெக்.

“ நேச நாடுகளின் நோக்கம் ஈடேறுவதற்கு இந்தியா எவ்வளவு முக்கியமானது என்று ஜப்பானியர்களுக்கு நன்ருகத் தெரியும். ஆகவே, இந்தியாவின் யுத்த முயற்சிகளைப் பாதிக்க வேண்டி, தம்மாலானவற்றை யெல்லாம் அவர்கள் செய்வார்களென்று நாம் எதிர்பார்க்கலாம். அப்படி அவர்கள் செய்வதனுல், நேச நாடுகள் தாக்கிப் போராடுவது தாமதிக்கலா மென்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கக் கூடும். அதற்குள்ளாகத் தம் நிலைமையை அவர்கள் பலப்படுத்திக் கொள்ளப் பார்ப்பார்கள்.”

“ தரை மூலமாகவோ, கடல் மூலமாகவோ, விமான மூலமாகவோ இந்தியாமீது படை எடுக்கக் கூடிய பலம் ஜப்பானியர்களுக்கு இப்போது இருக்காது என்று தான் நினைக்கிறேன். சென்ற வருஷம் அவர்கள் தாக்கி யிருக்கலாம். ஆனல், அந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் தவற விட்டு விட்டார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுடைய விமானங்கள் நமது கடற்கரையையும் துறைமுகங்களையும் அணுகித் தாக்கக் கூடும். ஆகையால், அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வந்து, நமக்கு நஷ்டத்தையும் துன்பத்தையும் உண்டாக்கக் கூடும்.”

தங்கள் நோக்கம் ஈடேற ஒட்டாதபடி செய்யப்படும் முயற்சிகளை, ஏற்கெனவே இந்திய மக்கள் அலட்சியப் படுத்தினர்கள். சமீபத்திலும் கூட, அலட்சியப்படுத்தி யிருக்கிறர்கள்.

மேன்மை தங்கிய ஜெனரல் சர் க்ளாட் ஆகின்லெக் *இந்திய பிரதம படைத் தலைவர்*
புது டில்லி வானெலி நிலையத்திலிருந்து டிசம்பர் 13-ம் தேதி
செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : ஜெனரல் சர் க்ளாட் ஆக்கின் லெக்	1	மத்தியக் கிழக்கு மகா நாடுகள்	4
ஒரு மகத்தான வேலை	1	தாக்குதலுக்கு நாம் ஆயத்தந் தான் ..	5
முரசொலி	2	சமாதானப் போர்வையும் வஞ்சகத் தாக்குதலும்	6
பாட்டு : உணவுப் பஞ்சம் மாளத் தேசியச் சேமிப்புப் பத்திரம் வாங்குவீர்	2	அங்கும் இங்கும்	7
தலையங்கம் : ரஷ்ய-செக் ஒப்பந்தம் ..	3	புதிய கடற் படை பீரங்கிப் பயிற்சி சாலை ..	9
		யுத்த நாட் குறிப்புக்கள்	10

முரசொலி

ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் தோற்று விட்டன. பெருவாரியாக வெடி குண்டுகளைக் கொண்டு ஜெர்மனியைத் தாக்கியதன் பயனாக மகா பயங்கரமான நிலைமை அங்கே ஏற்பட்டு விட்டது. ரஷ்யர்களோ மகோன்னத வெற்றிகள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். மத்திய தரைக் கடல் பெருவழி இப்போது நமக்கு மீண்டும் திறந்து விடப்பட்டிருக்கிறது.

—ஜெனரல் ஸ்மட்ஸ், நெய்ரோபியில் பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் கூறியது.

* * * * * *

"ஐரோப்பாக் கண்டத்தை நாம் தாக்குகிற வரையிலும், மீதி இருக்கும் ஜெர்மானியப் படைகளை நேரே எதிர்த்துப் போராடுகிற வரையிலும், பலம் பொருந்திய ஜப்பானியக் கப்பற் படையை நமது கப்பற் படைத் தாக்கி ஒழிக்கிற வரையிலும், யுத்தத்தின் முடிவு காலத்தை நாம் அணுகி விட்டோ மென்று சொல்லுவதற்கில்லை. ஏராளமான அமெரிக்கப் படைகள் இன்னும் அமெரிக்காவிற்குள்ளே தானிருக்கின்றன. நேசநாடுகளில் ஒரே ஒரு நாடு தான், ஜெர்மன் படைகளில் முக்கியமானவற்றோடு போராடி யிருக்கிறது. அந்த நாடு தான் ரஷ்யா."

—மிஸ்டர் ஹென்ரி ஸ்டிம்ஸன், டிசம்பர் மாதம் 9-ம் தேதி வாஷிங்டனில் கூறியது.

உணவுப் பஞ்சம் மாளத் தேசியச் சேமிப்புப் பத்திரம் வாங்குவீர்

இராகம்—சுருட்டி. தாளம்—ஆதி.

பல்லவி

உணவுப் பஞ்சமும் பண்டம் உயர்ந்த விலையும் போக
உமது பணத்தைச் சிக்கனம் செய்வீர் இக்கணம் (உண)

அனுபல்லவி

பணம் பல கோடி ஓங்கி பண்ட விலைகள் வீங்கி
பஞ்சம் உண்டாக்கும் அந்தப் பணத்தைச் சேமிப்பீர் பாங்கில் (உண)

சரணங்கள்

1. ஒன்றுக்கு நூறாய் விலை உயர்ந்த பண்டங்கள் வாங்கி
இன்றிருக்கும் பணத்தை எளிதில் தொலைக்க வேண்டாம்
நின்ற பின் யுத்தம் பண நெருக்கடி நேரும் போது
நினைத்துச் சேமித்தின்றே நீர் நிறைக்கும் பணம் உதவும்

2. நாளுக் கொரு நாலணா நாடி நிதமும் சேர்த்து
ஆளுக்குப் பத்து ரூபாய் அதற்குப் பத்திரம் கொள்வீர்
வாளுக் கிரையாய்ப் பகை மாளச் செய்தே பின் வரும்
நாளுக் குதவியாகும் நாட்டின் பஞ்சமும் மாளும் (உண)

Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1943-ம் ஞு டிசம்பர் மீ 17உ, வெள்ளிக்கிழமை | இதழ் 16

ரஷ்ய-செக் ஒப்பந்தம்

சென்ற மகா யுத்தம் முடிந்த பிறகு, நாஜி ஜெர்மனி தன்னைத் தாக்கக் கூடுமென்று ரஷ்யா கருதியது. அது போலவே செக்கோஸ்லோவேகியாவும் அஞ்சியது. ஆகவே, இந்த இரு நாடுகளும் 1934-ம் வருஷத்திலேயே ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டன. இந்த ஒப்பந்தப்படி இந்த இரு நாடுகளும் ஒன்றையொன்று தாக்கிக் கொள்ளக் கூடாது. மறு வருஷம் அதாவது 1935-ம் வருஷத்தில், மற்றொரு ஒப்பந்தம் செய்துகொண்டன. இந்த ஒப்பந்தப்படி, பிற நாடுகள், தம்மில் எதையாவது தாக்கினால், தற்காத்துக் கொள்ள ஒன்றிற்கொன்று உதவிக் கொள்ள வேண்டும். இதற்கு முன்னதாக இப்படிப் பட்டதோர் ஒப்பந்தம் பிரான்சோடும் ரஷ்யா செய்திருந்தது. 1936-ம் வருஷம் நியூரெம்பெர்கில் நடைபெற்ற நாஜிகள் மகா நாட்டில், இந்த ஒப்பந்தத்தை டாக்டர் கொப்பல்ஸ் மகா கடுமையாகக் கண்டித்தார். செக்கோஸ்லோவேகிய விமான தளங்களில் ஏராளமான விமானங்களைச் சோவியத் அரசாங்கத்தார் கொண்டு வந்து குவிக்கிறார்கள் என்று கூறி, நாஜிகளைக் கொதித்தெழச் செய்தார். இதனால் தான் ஜெர்மனி ஜப்பானோடு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டது. இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் 'போல்ஷிவிச'த்தை வேரறுக்க வேண்டுமென்பது தான்.

ஆனால் ரஷ்யாவோ, இரண்டு விஷயங்களைக் குறித்துக் கவலை கொண்டிருக்கிறது. முதலாவதாக, அக்கிரமமாக ஜெர்மனி இனி நடக்காது என்னும் உறுதிப்பாடு வேண்டும். இரண்டாவதாக, கிழக்கு ஐரோப்பிய ஐக்கிய அரசியல் ஒன்று ஏற்படுமோ என்று சோவியத் அரசாங்கம் கவலை கொள்ளுகிறது. இந்தக் கவலைகள் நேர்மையானவை தான். அடுத்த வீட்டில் அக்கிரமஸ்தன் குடியிருந்தால், நமக்கு இடைஞ்சல் செய்து கொண்டு தானிருப்பான். ஆனால், அவன் பேரில் கிரிமினல் நடவடிக்கைகள் எடுத்து நன்னடத்தை ஜாமீன் வாங்கியிருந்தால், மேலும் வாலாட்டுவானா? மாட்டான். அது போலவே தான் ஜெர்மனியும். அதன் அக்கிரமங்கள் தலைதூக்காதபடி அதனிடம் நல்ல நடத்தை ஜாமீன் வாங்கப்பட வேண்டியது அவசியந் தான். இரண்டாவதாக நாஜி தத்துவம் பொதுவுடமைத் தத்துவத்திற்கு முற்றும் முரண்பட்டது. ஆகவே பொது வுடமையை வேரறுக்க வேண்டுமென்பது தான் நாஜிகளுடைய ஆசை. பொதுவுடமைத் தத்துவத்தையோ, சோவியத் பொதுமக்கள் பொன்னே போல் போற்றி வளர்த்து வருகிறார்கள். எனவே, எத்தனை உயிர்களைப் பலி கொடுத்தாவது அதைக் காப்பாற்றுவதென்று உறுதி கொண்டு விட்டார்கள்.

இதைக் கண்டு ஜெர்மனி, தனக்குத் துணையாக தன்னையடுத்துள்ள நாடுகளை யெல்லாம் சேர்த்துக் கொண்டு கிழக்கு ஐரோப்பிய ஐக்கிய அரசியல் ஒன்றை அமைக்க அரும்பாடு படுகிறது. இந்த முயற்சி பலிக்குமானால், சோவியத் அரசாங்கத்தின் ஆதிக்கம் குறைய நேரும். ஆகவே தான், இது பற்றியும் ரஷ்யா கவலை கொள்ளுகிறது. இந்த ஐக்கிய அரசியல் அமையுமானால், செக்கோஸ்லோவேகியா அதில் முக்கியமான பங்கெடுத்துக் கொள்ள நேரும். இந்நாட்டை, ஜெர்மனி விழுங்கி ஏப்பமிட்டு விட ஆசை கொண்டு முயன்றது. எனவே செக் மக்கள் ஜெர்மனி மீது வெறுப்பு கொண்டார்கள். என்றாலும் ஜெர்மானியர்கள் செக்கோஸ்லோவேகியாவில் நுழைந்து அம்மக்களின் நல் வாழ்வைக் கெடுத்தனர். இது கண்ட செக் மக்களுக்கு ஆத்திரம் மூண்டது. டாக்டர் பினேஷ் தலைமையில் எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் பயனாக, ரஷ்யாவுக்கும் செக்கோஸ்லோவேகியாவுக்கும் ஒரு ஒப்பந்தம் டிசம்பர் மாதம் 12 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நிறைவேறியது. இந்த ஒப்பந்தம் நிறைவேற ஒட்டாதபடி சில முயற்சிகள் நடத்தன. அதன் பலனாக டாக்டர் பினேஷ் மாஸ்கோ விஜயம் தடைபட்டது. இறுதியில் அம்முயற்சி பலிக்கவில்லை. எனவே தான் டாக்டர் பினேஷ் மாஸ்கோ போய் வெற்றிகரமாக இந்த ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டார். ரஷ்யாவுக்கும் இங்கிலாந்திற்கும் சமீபத்தில் ஏற்பட்டதோர் ஒப்பந்தத்தையே இது பெரும்பாலும் ஒத்திருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின் 5-வது விதியின்படி, இந்த ஒப்பந்த நாடுகளில் எதுவும், பிற நாடுகளோடு ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ள வேண்டுமானால், இந்த ஒப்பந்தத்திற்குட்பட்ட மற்ற நாட்டைக் கலந்து சம்மதம் பெற்ற பிறகு தான் செய்ய வேண்டும். இந்த ஒப்பந்தத்தில், போலந்தையும் சேர்த்துக் கொள்ள அடிகோலியிருக்கிறது. இங்கே ஒரு விஷயம் கவனிக்கத் தக்கது. செக் குடியரசை ஜெர்மனி கூறு போட்ட காலத்தில், போலந்து டெஸ்செனை எடுத்துக் கொண்டது. ரஷ்யாவும் போலந்துங் கூட நேசமாயிருந்ததில்லை. இப்படிப்பட்ட நாடுகளை ஒன்றுபடுத்தியது ஜெர்மானிய நாஜிகளின் அக்கிரமங்கள் தான். கிழக்கு ஐரோப்பாவில் அமைதியை நிலை நாட்டும் பொருட்டுந்தான். யுத்தம் முடிந்த பிறகு, போலந்து ஒரு சுயேச்சை நாடாக வாழ வேண்டுமென் து தான், தன் ஆசை என்று, மார்ஷல் ஸ்டாலின் சமீபத்தில் குறிப்பிட்டார். போலந்துடன் இராணுவ ஒப்பந்தமும் செய்து கொள்ள விரும்புவதாகக் கூறினார். இந்தச் சந்தர்ப்பத்தை போலந்து தலைவர்கள் ஏற்றுக் கொள்ளுவார்களானால், உண்மையிலேயே கிழக்கு ஐரோப்பாவில், சமாதானமுண்டாக இடமுண்டு. அவர்கள் இதை ஏற்றுக் கொள்ளுவார்களா?

மத்தியக் கிழக்கு மகா நாடுகள்

காமன்ஸ் சபையில் ஈடன் பிரசங்கம்

டிசம்பர் மாதம் 11-ம் தேதி காமன்ஸ் சபையில் யுத்தத்தைக் குறித்த விவாதம் ஆரம்பமானது. அப்போது பிரதம மந்திரி விஜயம் செய்யக்கூட வில்லை. எனவே, அன்னிய நாட்டு மந்திரியான மிஸ்டர் ஆன்டனி ஈடன் ஒரு பிரசங்கம் செய்தார். அவர் பேசியதன் சுருக்கமாவது :—

சமீபத்தில் கெய்ரோவிலும் டேரானிலும் இரண்டு மகா நாடுகள் நடைபெற்றன. மூன்று வல்லரசுகளான நேச நாடுகளின் தலைவர்களும் அவர்களுடைய இராணுவ நிபுணர்களும் கூடினார்கள். இப்படிபட்ட மகா நாடுகள் நடை பெறுவது அரிது. என்றாலும், இவற்றிக்கு மதிப்பு அதிகம். இந்த மகா நாட்டில் நம் பிரதம மந்திரியும் இரவு பகல் கடுமையாக உழைத்தார். இது போல் அவர் இதற்கு முந்தி உழைத்திருக்க மாட்டாரென்று சொல்லலாம். அவரை விட்டு நான் பிரியும் போது, சற்று அயர்வோடிருந்தார். என்றாலும் அவர் உடல் நிலை நன்றா யிருந்தது. மிகுந்த ஊக்கத் தோடிருந்தார்.

இந்த இரண்டு மகா நாடுகளிலும் முதலில் இராணுவ நுட்பங்களைக் குறித்து விவாதித்தோம். இங்கே செய்யப்பட்ட முடிவுகளைப் போல், இந்தப் போராட்டம் ஆரம்பித்ததி லிருந்து ஒரு முடிவும் செய்யப்படவில்லை.

நான் கெய்ரோவுக்குப் போன போது ஜெனரலாஸிமோ ஷியாங் கெய் ஷேக்கும் அவருடைய மனைவியாரும் நமது பிரதம மந்திரியுடனிருந்தனர். அவர்களை நான் அப்போது தான் முதன் முறையாகக் கண்டேன்.

ஜப்பானோடு போராட்டம்

ஜப்பானோடு எந்த முறையில் போராட வேண்டும் என்னும் விஷயத்தில் நாங்கள் எல்லோரும் ஒன்று பட்டோம். நாம் எந்த அரசியல் கொள்கைக்காகப் போராடுகிறோ மென்பதையும் தெளிவு படுத்தினோம். அந்தக் கொள்கையாவது : ஜப்பானிய அக்கிரமத்தைத் தடுத்துத் தண்டிப்பதற்காகத் தான் மூன்று வல்லரசுகளும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றன. இதனால் இலாபமடைய வேண்டுமென்னும் எண்ணம் இவர்களுக்குக் கிடையாது. மேலும் நாடு பிடிக்க வேண்டு மென்னும் ஆசையும் இடையாது. ஆகவே, மேலும் ஜப்பான் அக்கிரமங்கள் செய்ய சந்தர்ப்பமே எற்பட ஒட்டாதபடி செய்ய வேண்டு மென்பது தான் இவர்களுடைய நோக்கம். அவர்கள் கைப்பற்றிய எல்லா நாடுகளிலிருந்தும் அவர்கள் விரட்டப் படுவார்கள். சீனாவுக்கு இழைத்த தீங்குகளுக்கும் ஜப்பான் நஷ்ட ஈடு செய்ய வேண்டும். கொரியாவை நாம் மறந்து விடவில்லை. அந் நாட்டு மக்களும் காலக் கிரமத்தில் சுயேச்சை பெறுவார்கள்.

இது நம் அரசாங்கத்தின் பழைய கொள்கை தான். பெரல் துறைமுகத்தை ஜப்பானியர் தாக்குவதற்கு முன்னதாகவே, நமது பிரதம மந்திரி ஜப்பானியர்களை எச்சரித்திருக்கிறார். அதில், அமெரிக்காவை ஜப்பான் தாக்கினால், அதற்கு ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே ஜப்பான் மீது பிரிட்டன் போர் தொடுக்கும் என்று நமது பிரதம மந்திரி கூறியிருக்கிறார். இந்தக் கொள்கையை கெய்ரோ ஒப்பந்தம் வலியுறுத்துகிறது. இதை நாம் வலியுறுத்துவதற்குக் காரணமென்ன ? ஜெர்மனியை நாம் அழித்து விட்டு, ஜப்பானோடு சமரசம் செய்து கொள்ளுவோமானால், கண்டிப்பாக மூன்றாவது மகா யுத்தம் ஆரம்பமாகும் என்னும் காரணத்தினால் தான்.

நாம் தயா தாட்சண்யத்திற்காக ஜப்பானோடு போராடப் போகவில்லை. ஒரு கடமை என்பதற்காகத் தான் போராடுகிறோம். சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஜப்பான் எவ்வளவு பாதகமா யிருக்கிறதோ, அவ்வளவுக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்கும் பாதகமாயிருக்கிறது. ஜப்பானிய ஆதிக்கம் சிதைந்தாலொழிய கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலந்து முதலிய நாடுகளுக்கு விமோசன மிருக்காது. இந் நாடுகளின் வீரர்கள் நம் நாட்டைப் பாதுகாக்கும் பொருட்டு 1939-ம் வருஷம் இங்கே வந்தார்கள். தம் நாடுகளுக்குப் பெரும் ஆபத்துக்கள் நேர்ந்துங் கூட, அவர்களில் பலர் இன்னும் இங்கிருக்கிறார்கள். அவர்களுடைய நாடுகளைப் பாதுகாத்துக் காப்பாற்றும் பொருட்டு நம்மாலான வகைகளி லெல்லாம் முயற்சிக்க வேண்டியது நம்முடைய கடமை. இதன் பொருட்டு எவ்வளவு காலமானாலும் ஜப்பானியர்களோடு நாம் கடுமையாகவே போராடியாக வேண்டும்.

இந்த யுத்தத்தை நடத்த வேண்டிய பெரும் பொறுப்புடையவர்கள் இந்த மூன்று வல்லரசுகளின் தலைவர்கள். இம் மூவரும் கெய்ரோவில் கூடிக் கலந்து பேசியது, இராணுவத் துறையிலும் அரசியல் துறையிலும் மிகச் சிறந்த பலனைத் தரும். நான் அங்கிருக்கும் போது, சீன நண்பர்களுடன், யுத்தத்திற்குப் பிறகு, அரசியல் கொள்கைளிலும் வியாபாரத்திலும் ஒத்துப் போக வேண்டியதைக் குறித்து விவாதித்தேன். அவர்கள் அதே கருத்தைத் தான் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஜப்பானோடு போர் தொடுப்பதிலும் யுத்தத்திற்குப் பிறகு ஒத்துழைப்பது சம்பந்தமாகவும் நாம் முன்னேற்ற மடைந்து கொண்டிருக்கிறோம்.

நான் மாஸ்கோவிற்குப் போய்த் திரும்பிய போது, பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் நெருங்கிய கூட்டுறவு ஏற்பட்டு விட்டதென்று இச் சபையோருக்கு அறிவித்தேன். அந்தக் கூட்டுறவு இப்போது மேலும் அதிகரித்துவிட்டதென்று கூறுகிறேன்.

டேரான் மகா நாட்டின் பலன்கள்

யுத்தம் விரைவில் முடிவடையும். இதன் பொருட்டு அம்மகா நாட்டில் எல்லாத் திட்டங்களும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது. இது வரை அப்படிப்பட்ட தொடர்பு அமையவில்லை. இதற்கான திட்டங்கள் இங்கே வகுக்கப்பட்டன. இவை போர்க் களத்தில் நிறைவேற்றப்படும்.

இதற்கு முன், போர்க் காலங்களில் ஒன்றுபட்டிருந்த நேச நாட்டினர் சமாதான காலத்தில் வேறுபட்டதுண்டு. மீண்டும் இப்படித் தான் நாம் வேறுபடும்படி நேருமோ என்று சென்ற வருஷம் கனம் அங்கத்தினர்கள் கேட்டிருப்பீர்கள். இப்படி நீங்கள் கேட்கவேண்டு மென்பது தான் ஜெர்மானியர்களின் நோக்கம். குழப்பத்தையும் சந்தேகத்தையும் நமக்குள் உண்டாக்குவது தான் அவர்களுடைய ஆசை. அதனால் அவர்களுக்கு மீண்டு மொரு சந்தர்ப்பங் கிடைக்கு மென்று எதிர் பார்ப்பார்கள். மீண்டும் யுத்தம் எற்படாதிருக்க வேண்டுமானால், பலமான, ஒற்றுமையுள்ள சர்வ தேச ஸ்தாபன மொன்று அமைய வேண்டும். இந்த ஸ்தாபனத்தை மீறுகிற அரசாங்கங்களைத் தண்டிக்க, தக்க ஆற்றல், அதற்கிருக்க வேண்டும். அப்படிப் பட்ட ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றனவா ? இது பற்றி 6 மாதங்களுக்கு முன்பு எவ்விதமான பதிலும் நான் கூறியிருக்க முடியாது. இப்போது அம்முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன வென்று துணிந்து கூறுவேன். போர்க்காலத்திலும், சமாதான உடன்படிக்கைகள் பேசப்படும்

மிஸ்டர் ஆன்டனி ஈடன்.

போதும், சமாதானம் நிலவப்பட்ட பிறகும், உலகம் அமைதியோடு வாழுவதற்கான முறைகளில் இந்த மூன்று வல்லரசுகளும் ஒன்றுபட வேண்டுமென்று, மாஸ்கோ மகா நாட்டில் முடிவானது. இந்த முடிவு டேரானிலும் உறுதி செய்யப்பட்டது. இம்மகத்தான பொறுப்பை, இம் மூன்று வல்லரசுகளும் மேற்கொண்டிருக்கின்றன.

உதாரணமாக, இத்தாலியில் ஒரு ஆலோசனை சபை நியமிக்கப்பட்டு நன்றாக வேலை செய்து கொண்டிருக்கிறது. இரண்டாவதாக லண்டனில் ஒரு கமிஷனும் ஏற்பட்டு விட்டது. இதற்கு அமெரிக்கப் பிரதிநிதியாக மிஸ்டர் வினான்ட் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த இரண்டு ஸ்தாபனங்களையும் அமைக்க வேண்டுமென்று மாஸ்கோ மகா நாட்டில் திட்ட மிட்டோம். இந்தத் திட்டம் எவ்வளவு முக்கியமான தென்று டெரான் மகா நாட்டின் போக்கிலிருந்து தெரிய வருகிறது.

டேரானில் நடைபெற்ற ரகசிய விவாதங்களிலிருந்து, எதிர் காலத்தில் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவிற்கும் துருக்கிக்கும் மிகவும் நெருங்கிய கூட்டுறவு ஏற்படுமென்று நான் முழுதும் நம்புகிறேன்.

சமீபத்தில் துருக்கி அன்னிய நாட்டு மந்திரி விடுத்த தோர் அறிக்கையில் அமெரிக்காவோடும் சோவியத் ரஷ்யாவோடும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு துருக்கி கொண்டிருக்கின்றதோ, அதே அளவு தொடர்பு இங்கிலாந்துடனும் கொண்டிருக்கிற தென்று குறிப்பிட்டிருக்கிறார். இம் மொழிகள் முற்றும் பொருத்தமானவை.

பெய்ரூட்டுக்கு ஜெனரல் செட்ராஸ் போய், லெபனான் தகராறுகள் பற்றி, லிவான்ட் நாடுகள் எப்படி வாழவேண்டு மென்பதற்காக முழு மனதோடும் நல்லெண்ணத்தோடும் சமரசம் பேசுவார்.

நம் மூன்று வல்லரசுகளின் நோக்கத்தைப் பிற நாடுகளெல்லாம் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டு மென்று நிர்ப்பந்திக்க வேண்டு மென்பது நமது ஆசை யல்ல. அந்நாடுகளை நாம் ஏன் மீட்க ஆவல் கொள்ளுகிறோ மென்றால், அந்நாடுகள் ஒவ்வொன்றும் ஐரோப்பாவின் ஒவ்வொரு அங்கமாக அமைய வேண்டும் என்னும் ஆசையினால் தான். இந்த ஏற்பாட்டில், ஏற்றத் தாழ்வான போக்கு எதுவு மில்லை. இவை பெரிதாயினும் சிறிதாயினும், மீட்கப்பட வேண்டும். அப்போது தான் அவை ஐரோப்பாவின் அங்கங்களாக இயங்க முடியும்.

யூகோஸ்லாவியாவையும் கிரீஸையும் ஜெர்மானியர்கள் கைப்பற்றி 3 வருஷங்களாகியும் இன்னும் போராட்டங்களும் குழப்பங்களும் இருந்து கொண்டு தானிருக்கின்றன. அங்கே ஜெர்மன் பிரசாரம் பலமாக நடந்து கொண்டிருக்கிறது. நமது நோக்கங்களைக் குறித்துப் பொய் வதந்திகளைக் கிளப்பி விடுகிறார்கள். நம் நேசர்களுக்கும் நமக்கும் பகைமை யுண்டாக்கப் பார்க்கிறார்கள். இவற்றை வெல்ல மூன்று முறைகளை நாம் கையாள வேண்டும். (1) எதிரிகளை எதிர்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு நடைமுறையில் எல்லா வகை உதவிகளையும் செய்ய வேண்டும். (2) இந்நாடுகள் விடுதலை யடைந்த பிறகு, அந்நாட்டினர் விருப்பப்படி அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள எல்லா வகைகளிலும் உதவி செய்யப்படு மென்று வற்புறுத்தப்பட வேண்டும். (3) நம் நேச நாட்டாரோடு நெருங்கிய தொடர்பு கொண்டு வேலை செய்ய வேண்டும்.

சென்ற பல மாதங்களாக ஜெனரல் டைட்டோ தலைமையில் எதிரிகளை யுகோஸ்லேவியாவில் எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு நாம் எல்லா வகைகளிலும் உதவிக் கொண்டிருக்கிறோம். ஒரு பிரிட்டிஷ் இராணுவ கோஷ்டி ஜெனரல் டைட்டோவுக்கு ஆதரவாக இப்போது அங்கேயிருக்கிறது. இதைப் போலவே ருஷ்யக் கோஷ்டி யொன்றையும், அங்கே அனுப்புவதாக தோழர் மால்டோவ் ஒப்புக் கொண்டார். தற்போதைக்கு ஜெனரல் டைட்டோவைத் தலைவராகக் கொண்ட தோர் அரசாங்கம் ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு தற்காலிக அரசாங்கந் தான். இந்நாடு மீட்சி பெற்ற பிறகு, இந்நாட்டவர்களின் விருப்பப்படியே இங்கோர் அரசாங்கம் அமையும்.

யுகோஸ்லாவிய மன்னர் இளைஞர். (கரகோஷம்.) அவர் பொருட்டு நான் பெரிதும் இரங்குகிறேன். இந்நாட்டின் மகா நெருக்கடியான பருவத்தில் அவர் பட்டத்திற்கு வந்தார். நேசநாடுகளுக்குச் சாதகமாகத் தன்

(5-ம் பக்கம் பார்க்க)

தாக்குதலுக்கு நாம் ஆயத்தந் தான்

படைகள் பற்றிய பொறுப்பு அதிகப்படுகிறது

ஆக்கின்லெக் பிரசங்கம்

இந்திய படைத் தலைவர் மேன்மை தங்கிய சர் க்ளாட் ஆக்கின்லெக் சென்ற 13-ம் தேதி இரவு புது டில்லி வானொலி நிலையத்திலிருந்து ஒலி பெருக்கிய சொற்பொழிவின் சாரமாவது :—

இந்தியாவின் எல்லைப்புறத்தில் நம் நிலைமையை வெகுவாகப் பலப்படுத்திக் கொண்டு விட்டோம். நமது தளங்களையும் போக்கு வரவு சாதனங்களையும் பெருக்கிக் கொண்டு விட்டோம். இந்த ஆயத்தங்களெல்லாம், நாம் எதிரியைத் தாக்கும் பொருட்டாகத் தான். இப்படிப்பட்ட ஆயத்தங்களை நாம் செய்யக்கூடு மென்று 18 மாதங்களுக்கு முன் நினைத்திருக்கவே முடியாது.

இன்னும் இடைவிடாது, நம்மால் இயன்ற வரை பலப்படுத்தி வருகிறோம். ஆயத்தங்கள் செய்து கொண்டு வருகிறோம். பஞ்சத்தினுலும் வெள்ளத்தினுலும், நோய்களினுலும் நமக்குப் பலவகைத் தடைகள் ஏற்பட்டன. ஆனால், நாம் இவற்றை வென்றோம். இன்னும் இவை போன்ற தடைகள் எவை ஏற்பட்டாலும் வெல்லுவோம். எதிர் காலத்தில் இவை போன்ற தடைகள் ஏற்படும் என்பது பற்றி சந்தேகமே கிடையாது. இந்தியா முழுதும் சங்கிலி கோர்த்தாற் போல் அநேக விமானக் கூடங்கள் தற்காலத் தேவைகளுக் கேற்ற முறையில் கட்டப் பட்டிருக்கின்றன. இவை கட்டப்பட்ட வகையைக் குறித்துச் சொன்னால், அது மிகச் சிறந்த்தோர் செயல் என்று எதிர் காலத்தில் அனைவரும் ஒப்புக் கொள்ளுவார்கள் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. யுத்தங் காரணமாக இந்தியாவிற்குள்ளிருக்கும் துறைமுகங்களுக்கும் ரயில்வேக்களுக்கும் வேலை வெகுவாக அதிகப்பட்டு விட்டது. இதைச் சமாளிக்க வேண்டி துறைமுகங்களையும் ரயில்வேக்களையும் வெகுவாக விருத்தி செய்து கொண்டிருக்கிறோம். நமக்குள்ள மகா கடுமையான பிரச்சினைகளில் இதுவும் ஒன்று. அதே சமயத்தில், இந்தியக் கப்பற் படையும் வெகுவாகப் பெருகியது. நமது கடற்கரைப் பாதுகாப்புக்கான அனைத்தும் செய்தாகி விட்டது. மத்தியதரைக் கடலிலும் மற்ற சமுத்திரங்களிலும் இந்தப் படை சிறந்த வேலை செய்திருக்கிறது. இந்திய விமானப் படை படிப்படியாக, பலத்திலும், திறமையிலும் ஓங்கிக் கொண்டு வருகிறது. பர்மாவில், பிரிட்டிஷ் விமானப் படையோடும், அமெரிக்க விமானப் படையோடும் சரி சமமா யிருந்து போராடி வருகிறது. அது தோன்றி நான்கே வருஷங்கள் தான் ஆயின. என்றாலும், நல்ல பலத்தோடு வளர்ச்சி பெற்றுக் கொண்டு வருகிறது. இதற்கு எதிர் காலத்தில் நல் வாழ்வு உண்டு.

இராணுவ முன்னேற்றங்கள்

சென்ற 3 வருஷங்களாக நடை பெற்ற யுத்தத்தின் போது இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் படைகளின் கண்களும், இந்தியப் படைகளின் கண்களும் மேல் திசையையே நோக்கிக் கொண்டிருந்தன. அதற்கேற்றபடி மேற்கேயுள்ள பாலைவனங்களில் இயந்திரங்களைக் கொண்டு போராடுவதில் நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றார்கள். இப்போது வேறொரு வகைப் போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருக்கிறது. பர்மா காடுகளிலிருந்தும், அதற்கப்பாலிருந்துங் கூட ஜப்பானியர்களை விரட்டியடிக்க வேண்டும். இதன் பொருட்டு நம் படைகளின் மனப் போக்கையுங் கூட மாற்றிக் கொள்ள வேண்டி யிருக்கிறது. பர்மாவிலுள்ள நிலைமை முற்றும் மாறுபட்டது. என்றாலும், அவற்றிற்கேற்ற முறையில் நம் படைகள் தம் போக்கை மாற்றி யமைத்துக் கொண்டது பெரிதும் பாராட்டத் தக்கதோர் செயலாகும். ஏனென்றால், பல வகைத் தடைகளை அவை வெல்ல வேண்டி யிருந்தது.

சென்ற மாத மத்தி வரையில், இந்தோ-பர்மா போர் முனையில் போராட்டத்தை நடத்துவிக்க வேண்டிய பொறுப்பு இந்தியப் படைத் தலைவருக்கு ஏற்பட்டிருந்தது. இப்போது, அந்தப் பொறுப்பு, புதிதாக ஏற்பட்டுள்ள தென் கிழக்கு ஆசியப் படைத் தலைவருக்கு மாறிவிட்டது. இந்தப் பொறுப்பை லூயி மௌண்ட் பாட்டன் பிரபு ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்திய படைத் தலைவர் என்னும் முறையில் இந்தியப் பாதுகாப்புக்கு நான் பொறுப்பாளி. ஆனால், வட கிழக்கு எல்லைப்புறப் பாதுகாப்புக்கு லூயி பிரபு தான் பொறுப்பாளி. அஸ்ஸாமிலும் கிழக்கு வங்காளத்திலும் உள்ள படைகளை இவர் தான் தலைமை தாங்கி நடத்துகிறார்.

இப்போது நடை பெறும் போராட்டத்தில், இந்திய படைத் தலைவருக்கு எவ்வித ஆதிக்கமும் கிடையாது. இருந்த போதிலும் அவருக்கு மகத்தான பொறுப்பு இருக்கிறது. இந்தப் பொறுப்பு நாள் தோறும் வளர்ந்து கொண்டிருக்கிறது. தரைப் படையையும், கடற்படையையும் விமானப் படையையும் நல்ல நிலைமையில் வைத்திருக்க வேண்டும். இவை தான் ஏற்ற சமயத்தில் ஜப்பானியர்களைத் தாக்கப் போகின்றன.

இந்தியா ஒரு பெருந் தளம்

இப்போது இராணுவ சம்பந்தமாக இந்தியா செய்ய வேண்டியதென்ன ? இந்தியா ஒரு பெரிய தளமாக அமைய வேண்டும். இந்த தளத்திலிருந்து தாக்கும் படைகள் பாதுகாப்போடும், திறமையோடும் போராட வேண்டும். இது மிக மிகக் கடுமையான தோர் வேலை தான். இதன் பொருட்டு நம் எல்லா அறிவையும் பலத்தையும் திரட்ட வேண்டும்.

தரைப் படையினரில் பெரும்பாலோரும், கடற்படையிலும் விமானப் படையிலும் உள்ள பலரும் இந்தியர்களே. இப்போது இவர்கள் ஜப்பானியர்களோடு போராடுகிறார்கள். இந்தப் படையினரின் பலங் குறையாமல் வைத்திருக்க வேண்டும். எதிரியோடு போராடுவதற்குத் தேவையான அனைத்தையும் அவர்களுக்கு வழங்க வேண்டும். இது இலகுவான வேலையல்ல. நாம் கடுமையாக இதன் பொருட்டு உழைக்க வேண்டும். இது மட்டுமா ? ஜப்பானியர்களை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையும் அமெரிக்காவையும் சேர்ந்த விமானப் படைகளுக்கும் கடற் படைகளுக்கும் தேவையானவற்றை வழங்குவது பற்றி பெரிதும் உதவ வேண்டி யிருக்கின்றது.

அதே சமயத்தில், மத்தியதரைக் கடற் பகுதியிலுள்ள இந்தியப் படைகளுக்குத் தேவையானவற்றையும் அனுப்ப வேண்டிருக்கின்றது. இந்தப் படைகளோ மிகவும் முக்கியமானவை. ஆகவே, தென் கிழக்கு ஆசியப் படைத் தலைவர் ஒருவர் தனிமையாக நியமிக்கப்பட்டு விட்டதனாலேயே, நமது வேலை குறைந்து விடவில்லை. யுத்தத்தை நடத்துவது சம்பந்தமாக நம் வேலைகள் அதிகப்பட்டிருக்கின்றன வென்று சொல்லலாம்.

நேச நாடுகளுக்கு இந்தியா எவ்வளவு முக்கியமானது என்று ஜப்பானியர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே, இந்தியாவின் யுத்த முயற்சிகளைக் குலைக்க அவர்கள் பல வகைகளிலும் முயற்சிப்பார்களென்று எதிர் பார்க்கலாம். இப்படிச் செய்வதனால் நேச நாடுகள் தம்மைத் தாக்குவது தாமதப்படு மென்றும் அதற்குள் தாம் தம் நிலைமையைப் பலப்படுத்திக் கொள்ளலா மென்றும் அவர்கள் நினைக்கக் கூடும்.

இப்போது தமக்குள்ள படை பலத்தைக் கொண்டு விமான மூலமாகவோ, கடல் மூலமாகவோ, தரை மூலமாகவோ ஜப்பானியர்கள் இந்தியா மீது படை எடுக்கக் கூடுமென்று நான் கருதவில்லை. சென்ற வருஷம் அவர்கள் முயற்சித்திருக்கலாம். ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் தவற விட்டார்கள். என்றாலும், நம் கடற் கரைகளுக்கும் துறைமுகங்களுக்கும் அவர்கள் விமானங்களில் வந்து தாக்கி சேதத்தை உண்டாக்கலாம்.

ஜப்பானியர்கள் தாக்கவுங் கூடும்

இப்படிப்பட்ட தாக்குதல்களுக்கு நாம் ஆயத்தமாகத் தான் இருக்கிறோம். ஆனால் ஒரு விஷயம். இப்படிப்பட்ட தாக்குதல் நேராதபடி, எவ்வளவு சிறந்த பாதுகாப்பாயிருந்தாலும், பிரிட்டனிலுள்ள பூரண பாதுகாப்புங் கூட, தவிர்க்க முடியாது. நாம் ஜப்பானியர்களை எவ்வளவுக் கெவ்வளவு, கடுமையாகத் தாக்குகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் உயிருக்குத் துணிந்து, நமது ஸ்தாபனங்களையும் ஏற்பாடுகளையும் குலைக்க முயற்சிப்பார்கள். அதன் மூலம் நம் யுத்த முயற்சியையும் சீர்குலைக்கப் பார்ப்பார்கள். இது வரை தரை மூலம் நம் எல்லைப்புரத்தைக் கடந்ததில்லை. இதைக் கொண்டு அவர்களால் கடந்து வருவதற்கு முடியவில்லை யென்று நினைத்துவிடக் கூடாது. பர்மா எல்லைப்புரம் காடுகளடர்ந்த மலைப் பிரதேசம். இதன் வழியாகப் பெரும் படைகளைக் கொண்டு வருவது முடியாத காரியம். சிறு சிறு பிரிவுகளாகக் கொண்டு வருவதனால், ஜப்பானியர்களுக்கு எவ்வித பயனுமில்லை. நமக்குள் பீதியை யுண்டாக்கும் பொருட்டும், தம் பிரசாரத்திற்கு உதவியாகவும் சிறு சிறு படைகளாக வர அவர்கள் முயற்சிக்கலாம். என்றாலும், அவர்களால் நமக்கு எந்த விதத் தீமையும் செய்ய முடியாது. நமது கடற் கரைகளில் சிறு சிறு படைகளாக வந்திறங்கி பீதியையும் குழப்பத்தையும் உண்டாக்க முயற்சிக்கலாம். இதைக் கொண்டு, இந்தியாவில் நிரந்தரமாக வேரூன்றிக் கொள்ளலாமென்று எதிர்பார்க்க முடியாது. இப்படி யெல்லாம் அவர்கள் செய்வார்களானால், நாம் என்னென்ன முறைகளைக் கையாள வேண்டு மென்று சதா காலமும் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம். நமது முயற்சிகளைக் குலைக்கப் பார்க்கும் எதிரிக்கு, ஏராளமான நஷ்டத்தை உண்டு பண்ண வேண்டு மென்பது தான் நமது நோக்கம்.

தங்கள் நோக்கம் ஈடேற ஒட்டாதபடி செய்யப்படும் முயற்சிகளை, ஏற்கெனவே இந்திய மக்கள் அலட்சியப் படுத்தினார்கள். சமீபத்திலும் கூட, அலட்சியப்படுத்தி யிருக்கிறார்கள். நானும் என் போன்ற மற்ற படைத் தலைவர்களும் இங்குள்ள படைகளுக்குத் தலைமை பூண்டு, இந்தப் பெரும் வேலையை நடத்துவதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறோம். உங்களுடைய வீரத்திலும் மன உறுதியிலும் எங்களுக்குப் பூரண நம்பிக்கையுண்டு. இவற்றைக் கொண்டு இந்த வேலையை வெற்றிகரமாக முடிக்கக் கூடும். பரிபூரண, நிபந்தனையற்ற வெற்றி தான் அந்த முடிவு.

(4-ம் பக்கம் தொடர்ச்சி.)

நாட்டு மக்களைத் தூண்ட அரும்பாடுபட்டார். இப்போது கடுமையான தோர் நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருக்கிறார். யுகோஸ்லாவியாவிலும், அதற்கு வெளியேயும் உள்ள அந்நாட்டவர்களை ஒன்று படுத்த நம்மாலானவரை முயற்சிக்க வேண்டும்.

ஆனால் கிரீசிலோ இன்னும் ஜெர்மானியர்களுக்கு விரோதமாகப் போராடும் கோஷ்டிகள் பலவிருக்கின்றன. அரசியல் கட்சிகளுக்குள்ள வேற்றுமைகள் இருக்கின்றன. இவர்கள் அனைவரையும் ஒற்றுமைப் படுத்தி எதிரியோடு போராடும்படிச் செய்வது தான் நமது நோக்கம். தன் குடிகளுக்குள் வேற்றுமை யுண்டாவதற்கு, தான் காரணமாயிருக்க விரும்பவில்லை யென்று கிரேக்க மன்னர் தன் ஆலோசனை சபையினருக்குச் சென்ற நவம்பர் மாதமே ஒரு கடிதம் எழுதியிருந்தார். இங்கே நாம் செய்யவேண்டிய வேலை மிகவும் கடுமையானது தான். என்றாலும் கூடிய சீக்கிரம் நம் முயற்சி இங்கே பலிக்கு மென்று நம்புகிறேன்.

இத்தாலியப் போராட்டம்

நம் படைகள் இத்தாலியில் இறங்கிய முதல் மாதத்தில் முன்னேறியது போல, சென்ற 3, 4, மாதங்களாக முன்னேறக் கூடவில்லை. இதனால் நம் படைகள் திறமையற்றுவிட்டன வென்று சொல்ல முடியாது. இப்போது நம் படைகள் குறுகிய நிலப்பகுதியி லிருக்கின்றன. மண்ட்காமரியின் படைகள் சாங்ரோ ஆற்றைக் கடந்து, ஜெர்மானியர்கள் பின்வாங்கும்படி தாக்குகின்றன. இந்தச் சமயத்தில் கடுமையாக மழை பெய்தபடியால் நம் படைகள் முன்னேறிப் போகக் கூடவில்லை. அப்போது நியூசிலந்து ப்டைகளும் வந்திறங்கின. ஆகையால் 8-ம் படையின் பலம் பெருகிற்று. இதற்கிடையில் 5-ம் படை மாக்னனேகணவாயை யடுத்த மலை யுச்சிகளைக் கைப்பற்றிக் கொண்டன.

இத்தாலியில் பிரிட்டிஷ் சேனைகள் இறங்கியது முதல், நவம்பர் மாதம் 23-ம் தேதி வரை அதற்கு ஏற்பட்ட சேத விவரம் : 3,212 பேர்கள் கொல்லப்பட்டார்கள் ; காயப்பட்டவர்கள் 9,709 ; காணமற் போனவர்கள் 3,153. மொத்தச் சேதம் : 16,074. அமெரிக்கப் படைகளுக்கு நவம்பர் மாதம் 25-ம் தேதிவரை நேர்ந்த சேதம் : கொல்லப்பட்டவர்கள் 1,603 ; காயப்பட்டவர்கள் 6,361 ; காணமற்போனவர்கள் 2,685. மொத்தச் சேதம் : 10,649. கைதியான ஜெர்மனியர்களின் எண்ணிக்கை 6,000 பேர்களுக்கு அதிகமிருக்கும்.

இந்த மூன்று மகா நாடுகளைக் குறித்தும் என் கருத்துக்களைத் திரட்டிக் கூற விரும்புகிறேன். இந்த மகா நாடுகளின் பயனாக பிரதம மந்திரியும் நாஆும் மிகவும் ஊக்கங் கொண்டோம். நமது நேச நாட்டுத் தோழர்களும் ஊக்கங் கொண்டார்களென்று தான் நினைக்கிறேன். அந்த அளவிற்கு இச்சபையோருக்கு நற்செய்தி கூறுகிறேன். இதைக்கொண்டு நாம் பெருமிதங் கொண்டுவிடக்கூடாது. நாம் பெருமிதங் கொள்வோமானால், நான் கூறிய நற்செய்தி போய்த்துப் போகவும் நேரும். நேச நாடுகள் வகுத்திருக்கும் திட்டங்கள் மகத்தானவை. இவற்றை நிறைவேற்ற இன்னும் சில மாதங்கள் வரை பெரும் முயற்சி செய்யவேண்டும். கூடிய விரைவில் வெற்றிபெற வேண்டுமென்னும் உறுதி கொண்டுள்ள நாம், மகா கடுமையானதோர் வேலையை மேற்கொண்டிருக்கிறோம். பெரும் போராட்டங்கள் நடைபெறப் போகின்றன. இதற்கு, நமது பூரண பலமும் முயற்சியும் தேவை. இந்த அளவிற்கு நாம் முயற்சிப்போமென்று வாக்குறுதி தரும்படி இச்சபையோரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். (கரகோஷம்.)

சமாதானப் போர்வையும் வஞ்சகத் தாக்குதலும்

ஜப்பானிய மன்னரின் நிர்க்கதியான நிலைமை

அச்சு ஆட்சியில் உரிமைகளேது ?

சமாதானத் தாக்குதல் என்னும் புதிய தந்திரம். ஜெர்மன் ராஜ தந்திரிகள் இடமாற்றத்திற்குக் காரண மென்ன ? டோக்கியோ மகா நாட்டுத் தீர்மானம். அச்சு நாட்டாரின் புதிய ஏற்பாடு. அச்சு நாடுகள் கொண்ட நடுக்கம். பிரசாரத் தொனியில் மாற்றம். ஜப்பானில் ராஜ தந்திர சங்க ஸ்தாபனம். ஜப்பானியர் சொல்லுக்கு முரணான செயல், முதலியவை பற்றி விளக்கி திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து டிசம்பர் மாதம் 5-ம் தேதி கோயமுத்தூர் வக்கீல் நஞ்சுண்டையா அவர்கள் ஒலி பெருக்கிய சொற்பொழிவாவது :—

முன்னுக்குப் பின் முரண்பாடு

ஜெர்மானியர்களும் அவரது அச்சுத் தோழர்களும் ஒரு தலைக்கட்டில் இரண்டு பெரிய கோர யுத்தங்களுக்குக் காரணஸ்தர்களாயிருக்கிருர்கள் என்பது அனைவரும் அறிந்த விஷயம். உலகெங்கும் ஆதிக்கம் பெற்று, ஒரு புதிய சமூக அமைப்பை ஏற்படுத்தப் போவதாக ஹிட்லர் பறைசாற்றினுர். தமது கொடிய கொள்கைகளை பரப்புவதற்காக ''மெய்ன் காம்ப்'' என்ற புத்தகம் வெளியிட்டு, அவரது பிரஜைகள் அதை ஒரு புதிய வேதமாகக் கொண்டாடும்படி செய்தார். பிறகு ஐரோப்பிய நாடுகளின் பேரில் படையெடுத்தார் ஹிட்லர். நிரபராதிகளான அபிஸீனியர்களின் மீது விஷப் புகை விட்டுப் பலரைக் கொன்றவர் அவரது தோழர் முஸோலினி. சீனத் தலைவர்களை தமது குருவாகப் பாவிப்பதற்குப் பதிலாக, அந்த நாட்டில் குண்டுமாரி பொழிந்து அட்டூழியம் செய்கிறவர் டோஜோ. மித்ரபேதம் செய்வதில் இம் மூவரும் கை தேர்ந்தவர்கள். ஆனுல் ஆற அமர யோசித்துப் பார்ப்பவர்களுக்கு இவர்களுடைய சூழ்ச்சிகள் எளிதில் புலனுகும். இவர்களுடைய காரியங்களும் பேச்சுக்களும் முன்னுக்குப் பின் முரணுகவே இருக்கும்.

ஹிட்லர் நயவஞ்சகம்

நயவஞ்சகமாக எதிரிகளுடைய அரணில் புகுவதென்று தீர்மானித்தார் ஹிட்லர். நேச நாட்டாரது கோட்டைகளோ தமது கோட்டையைப் போல் அடக்குமுறை, அட்டூழியம், பீதி இவைகள் நிறைந்த ஒரு கல்லறை போல் அல்லாது, மக்களது அன்பையும் ஆதரவையும் பெற்றவை. இவைகளை எப்படித் தகர்ப்பதென்று யோசித்து, இந்த வருஷ ஆரம்பத்திலிருந்து தனது சகாக்களாகிய முஸோலினி, டோஜோ இவர்களுடன் இந்த சமாதானத் தாக்குதல் என்ற ஒரு புது தந்திரத்தை பிரயோகிக்க ஆரம்பித்தார். தங்களது வேனிற் கால வெடிகுண்டு வீச்சுகளோடு மித்ரபேதத்தை உண்டு பண்ணக்கூடிய சாமர்த்தியம் உள்ள தங்களது ராஜ தந்திரிகள் மூலமாக, நேச நாடுகளுக்குள் மித்ரபேதம் உண்டாக்குவதென்று துவக்கினுர்கள். இந்த எண்ணத்துடன் தமது தேசத்தில் நேச நாடுகளுக்கு அனுதாபிகளாயிருந்த சிலரை, தங்களது கக்ஷிக் கோட்பாடுகளுக்கு விரோதமாயிருப்பவர்களாயிருந்தாலும் சரி, நேச நாட்டு இராஜ தந்திரிகளாக அனுப்புவதென்று ஆரம்பித்தார்கள். உதாரணமாக ஹிட்லர் தனது ராஜ தந்திரிகள் நியமனம் செய்வதில், வாஷிங்டனில் பிரதிநிதியாக இருந்த டாக்டர் டீக்காப்பை ஸ்பெயின் நாட்டின் தலைநகரான மாட்ரிடுக்கு அனுப்பியதிலிருந்தும், அங்கு ஸ்பெயின் வெளி நாட்டு மந்திரி கௌண்ட் ஜோர்டானு என்பவர் சமாதான முயற்சிகளை பிரேரேபணை செய்ய ஸ்பெயின் தேசம் தயாராக இருக்கிறதென்று வெளிப்படையாகப் பிரசுரித்ததிலிருந்தும் நன்கு விளங்கும். அதே போல, அப்போது ஆதிக்கத்திலிருந்த முசோலினி, சென்ற பிப்ரவரி மாதம் தனது மந்திரி சபையில் பன்னிரண்டு ஸ்தானங்களை மாற்றியதிலிருந்தும் தனது மருகமன் கௌண்ட் சியானுேவை, வாடிகன் மந்திரியாக அமைத்ததையும் கண்டோம். அதே காலத்தில் ஜப்பானின் பிரதம மந்திரி டோஜோ, தனக்கு மிகவும் நம்பிக்கையுள்ள வெளி நாட்டு இலாக்கா மந்திரியை மாற்றி மாஸ்கோவிலும் லண்டனிலும் ஜப்பானியப் பிரதிநிதியாக இருந்த ஷிக்மிட்சோ என்பவரும், ஜப்பானியர் கையாண்டு வரும் ராணுவ முறைகளை எதிர்த்து ஜப்பான், இங்கிலாந்து, யுனைடெட் ஸ்டேட்ஸ், முதலி தேசங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்ற பிரசாரத்தை மும்முரமாக நடத்தி வருபவரையும், நியமித்த விஷயம் கவனிக்கத் தக்கது.

அச்சு நாட்டாரது சமாதான மார்க்கம்

மேலும் அச்சு நாட்டாரது சமாதான மார்க்கத்தைப் பற்றி அச்சு நாட்டார் வெளியிட்ட விளம்பரங்கள் பழைய மார்க்கங்களை விடச் சிறிது மாறி இருந்ததையும் கண்டோம். சென்ற மார்ச் மாதத்தில் டோக்கியோவில் நடந்த அச்சு நாட்டு மகா நாட்டில் ''தங்களுக்குள் நீதி நிறைந்ததும், சதா உலக அமைதி பொருந்தியதுமான ஒரு புது உலக அமைப்பு விஷயத்தில் ஏக மனதாக முடிவாயிற்றென்று'' வெளியிடப்பட்டது. அதை அனுசரித்து, சென்ற ஏப்ரல் மாதத்தில் ஹிட்லரும் முசோலினியும் சந்தித்து விடுவித்த பிரசுரத்தில் ''ஐரோப்பிய நாகரிகத்தையும் ஐரோப்பிய நாட்டாரது சுயேச்சையையும் பாதுகாத்து அந்த எல்லா நாட்டவருடைய பாத்தியதைகளையும் நியாயமான முறையை அனுசரித்து உலகத்திலுள்ள சகல செல்வத்தையும் ஐரோப்பிய நாட்டார் அனைவரும் பங்கிட்டுக் கொள்ளும்படியான ஒரு புதிய ஏற்பாடு தான் அச்சு நாட்டாருடை நோக்கங்கள் என்று அறிவித்தார்கள்.'' இது, உலகத்து மக்களுக்கு நேச நாட்டார்களது திட்டப்படி ஏற்பட்ட அட்லாண்டிக் சார்டர் போலவே, தாங்களும் உலக அமைதியையும் நீதியையும் நிலை நிறுத்த சமாதான ஏற்பாடுகளைக் கையாளுவதாக நடித்துக் காட்டிய ஒரு தோற்றம். ''கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகப் பாவித்துத் தானுந் தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடினுற் போலுமே,'' என்றபடி தான் என்பது பிறகு நடந்துவரும் செய்திகளிலிருந்து, இது சமாதானத் தோற்றமும் வஞ்சகத் தாக்குதலுமே யல்லாமல், வேறல்ல, என்று நாம் அறியலாம். அச்சில் முதன்மையாக முறிந்தவர் இத்தாலிய மக்களிடையே இருக்க இடமுமின்றி ஓடி அலைந்து தம்பி ஹிட்லரை கட்டியழ ஆரம்பித்து விட்டார்.

அச்சுப் பிரசார தொனியில் மாறுதல்

சாதாரணமாக வயதில் முதிர்ந்த உடன் பிறந்தாரொருவர் இறந்தவுடனே அவருடைய பின்னவர்களுக்கு எப்படி மரண பயம் ஏற்படும்! அதே போல், என்ன வெளிப் பாசாங்கு செய்தபோதிலும் ஹிட்லருக்கும் டோஜோவுக்கும் தங்களது பழய தாக்குதல் முறைகளில் நம்பிக்கை குறைந்திருப்பதோடு முஸலோனியின் ஆதிக்கத்தில் இத்தாலி எப்படி 1940-வது வருஷம் பிரிட்டனைத் தாக்கி ஜெர்மனியோடு ஐரோப்பாவை பங்கு போட்டுக்கொள்ளும் பேராசையோடு இருந்ததோ, 1942-ம் வருஷம் இத்தாலியரை ஒருவரும் தாக்க முடியாது எகிப்திலும் லிபியாவிலும் நமது எதிரிகள் வெற்றி பெறுவது ஒரு நாளும் முடியாத காரியம் என்று நினைத்தார்களோ, பிறகு 1943-ம் வருஷம் மத்தியில் அதெல்லாம் மாறி, எங்களது நாட்டில் கால் வைத்தால் காலைத் துண்டித்து விடுவோம் என்ற நிலைக்கு வந்தார்களோ, இப்பொழுது நேச தேசத்தாருக்கு சரணுகதி அடைந்து ஹிட்லரின் ஆதரவில் எதிர்த்து நிற்கும் ஜெர்மன் படைகளிலிருந்து முசோலினியைச் சேர்ந்த கொள்ளைக்காரரிடமிருந்து எப்படி தப்புவிப்பதென்ற நிலைமைக்கு வந்திருக்கிருர்களோ, அதே போல், ஹிட்லரும் அவரைச் சேர்ந்த நாஜிகளிடத்திலிருந்து எப்படி தப்புவிப்பதென்ற பீதி ஜெர்மனியருக்கும், டோஜோ முதலிய (வார் லாட்ஸ்) ராணுவ தளகர்த்தரிடமிருந்து எப்பொழுது தப்பித்துக் கொள்ளுவோமென்ற பயம் ஜப்பானியர்களுக்கும் ஏற்பட்டுவிடப் போகிறதென்ற பயத்தால், இவ்விரண்டு அச்சு நாட்டு அரக்கர்களும் தற்பொழுது தங்களது பிரசார தொனிகளை மாற்றி, சமாதானத் தாக்குதல் என்ற முறையைக் கையாள ஆரம்பித்து விட்டார்கள். நவம்பர் 30-ந் தேதி பெர்லினிலிருந்து கிடைத்த அறிக்கை ஒன்றில், ''அதிகமாகப் பரவி வரும் சமாதானப் பேச்சுகளைப் பற்றி திருப்பித் திருப்பிக் கேட்கிருேம் என்ற காரணத்தால், மறுக்க வேண்டியதில்லை யென்று செய்தி கிடைத்திருக்கிறது.'' சென்ற நவம்பர் 28-ல் வாஷிங்டனிலிருந்து வந்த அறிக்கை யொன்றில், ஜப்பானும் சமாதானத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய ஜப்பான் மாஜி மந்திரி தலைமையில் ஒரு புதிய ராஜ தந்திர சங்கத்தை ஏற்படுத்தி, மத்தியஸ்தர்கள் மூலம் நேச நாட்டாரை சமாதானத்திற்கு உட்படுத்த முயன்று வருவதாகத் தெரிகிறது.

ஜப்பானியர் தாக்குதல் முன்னுக்குப் பின் முரண்

ஐரோப்பாவில் ஹிட்லரும் முசோலினியும் கையாண்ட முறைகளை விட, ஆசியாக் கண்டத்தில் ஜப்பானியர்களது சமாதானத் தாக்குதல் முன்னுக்குப் பின் முரணுக இருப்பதோடு, வெகு விசித்திரமாகவுமிருக்கிறது. ஜப்பான் யாதொரு காரணமுமின்றி சைனு மீதும், ரஷ்யா மீதும் யுத்தத்துக்குப் போனதெல்லாம் சமாதானத்தை நாடியே என்று சொல்லிக் கொள்வதுடன், கடைசியாக சைனுவினது கிழக்கிந்திய மூன்று ராஜதானிகளையும் ஒரு தனி நாடாகப் பிரித்து, அதனுடைய சுயேச்சை உயிர் நிலையை டோக்கியோவில் ஸ்தாபித்திருக்கிருர்கள். சமீப காலத்தில் நான்கிங் என்ற இடத்தில் சீன தேசிய சர்க்கரை நிறுவி, தங்களது புதிய அமைப்பு (Co-Prosperity) என்ற ஜப்பானிய புத்துணர்ச்சியில் தாங்களும் கலந்து கொள்வதாக ஒப்பந்தம் செய்திருக்கிருர்கள். கிழக்கிந்தியத் தீவுகளையும் பர்மாவையும் தனது ஆதிக்கத்தில் வைத்து, இந்தியாவின் மீது படையெடுத்து வர முடியாமல், பர்மிய எல்லையிலேயே நிறுத்தப் பட்டிருக்கிருர்கள். அவர்கள் ராணுவ முறையில் முன்னேருதபடி நிறுத்தக் கூடிய சக்தி, நேச நாட்டுப் படைகளுக்குக் கிடைத்திருக்கிறது. இதை உணர்ந்த ஜப்பானியர், இப்பொழுது ஒரு நூதன முறையைக் கையாண்டு வருகிருர்கள். சுபாஷ் சந்திர போஸை ஒரு கையாளாக வைத்துக் கொண்டு, இந்தியர்களை ஏமாற்ற சதி செய்து வருகிருர்கள். நாம் இந்த மோச வலையில் சிக்கப் போவதில்லை. எனின், இந்தியர்களது தற்போதைய கடமையென்ன ? 40 கோடி மக்களில் 10 லக்ஷம் இப்போது யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் வீரர்கள், யுத்தத்துக்குப் பிறகு வீர சுயேச்சை நாடும் தீரர்கள்—அண்டமான் ஆட்சி, கைதி சைன்யம், ஜப்பானியப் பட்டாஸ் ஆயுதம், இவைகளுக்கு இடம் கொடுப்பீர்களா ?

ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுததாம் !

ஜப்பானியருக்கு இந்தியாவின் மீது அவ்வளவு இரக்கம் ஏன்? ஆட்டுக்கு இரங்கி ஓநாய் அழுவது போல் அல்லவா ! சைனுவிலும், ஜப்பானியரது ஆதிக்கத்தில் கிடைத்திருக்கும் நாடுகளிலும் என்ன உரிமைகள், சுயேச்சை, ஆதிக்கம் இருந்து வருகின்றன ? அவர்கள் தங்களுக்கு நாகரிகத்தையும் கலையையும் தந்த சீனரை, சென்ற பத்து வருடங்களாக சித்திரவதை செய்து வருகிருர்கள்! தங்களுக்குத் தோன்றும்போது, தங்களுக்கு பாதிக்கக் கூடிய எல்லா உடன்படிக்கைகளையும் கொஞ்சமும் தயங்காது மற்றவர்களுடைய உரிமைகள் என்பதை சிறிதளவும் கனவிலும் நினையாத ஜப்பானியர்களுக்கு, இந்திய சுதந்திரத்தின் மீது இவ்வளவு கவலை என்ன ? ஜப்பானிய அரசரே எவ்வித அதிகாரமுமின்றி, சேனைத்தலைவர்களது கையில் சிக்கி நசுக்குண்டிருக்கையில், மற்ற ஜப்பானியப் பொது மக்களது உரிமைகளோ அவர்களது ஆதிக்கத்திற்குட்பட்ட கிழக்கிந்திய மக்களது வாழ்வோ, எபபடி இருக்கிறது என்று யூகித்துக் கொள்ளலாம். ஆசியாவைக் கட்டியாள வேண்டுமென்ற பேராசையில், இந்திய நாடானது முக்கிய ஸ்தானத்தை வகிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இந்த வருஷம் சைனுவில் சுங்கிங்கிலிருந்து சீன கவர்மெண்டாரையும் வடக்கத்திய பொது உடமைச் சீனர்களையும் தூக்கி விட்டு இருவர்களுக்குள் பிளவு ஏற்படுத்தி, சுங்கிங் சர்க்கார் தங்களது புதிய அமைப்பில் சேரும்படி ஏற்பாடு செய்து, தாங்கள் ஆக்ரமித்திருக்கும் சீன தேசத்தை அவர்களிடம் ஒப்புவிப்பதாகவும், ஆனுல் ஜப்பானிய சைன்யங்களை நிறுத்தும் பாத்தியதை தங்களுக்குண்டென்றும், சைனுவை துண்டித்துக் கையாள வேண்டுமென்பதும், ஒரு சமாதானத் தாக்குதலே. ஜப்பானியரது சமாதானக் கொள்கை என்னவென்பது சென்ற அக்டோபர் மாதம் 13-ந் தேதி யன்று ''நாடுகளின் அமைதியின் அஸ்திவாரம்'' என்ற தலைப்பின் கீழ் டோக்கியோவிலிருந்து தாடஹிகோ இமாய்சுமாய் கூறியதாவது :—

''அமைதியின் அஸ்திவாரம் சக்ரவர்த்திகளைச் சேர்ந்தது. ஜப்பானைத் தவிர வேறெந்த மக்களும் ஒரு தெய்வீக யுத்தத்தை நடத்த

(9-ம் பக்கம் பார்க்க)

அங்கும் இங்கும்

சமீபத்திலே ஸர் வால்டர் ஸிட்ரீன் என்பவர் மாஸ்கோவிற்கு விஜயம் செய்துவிட்டு வந்திருக்கிறார். அவர் மாஸ்கோவில் கண்ட விஷயங்களை வர்ணித்திருக்கிறார். யுத்தம் எதுவுமே ருஷ்யாவில் நடக்காதிருந்த காலத்தில், மாஸ்கோவில் எப்படி வியாபாரங்கள் நடந்து கொண்டிருக்குமோ, அதே போல் தான் இப்பொழுதும் நடந்து கொண்டிருக்கிறதாம். ரஸ்தாக்கள் எல்லாம் வெகு சுத்தமாக இருக்கின்றனவாம். துருப்பு லாரிகளும், டாங்கிகளும் அதிகமாக நடமாடுவதில்லையாம். போர்முனை தான் மாஸ்கோவிற்கு வெகுதூரம் மேற்கே போய்விட்டதே! எங்கு பார்த்தாலும் ஏக பஸ் வண்டிகள் காணப்படுகின்றனவாம். பூமிக்கடியில் போகும் ரயில்கள் சௌகரியமாக ஓடுகின்றனவாம். ஒரு துண்டுக் கடுதாசியையோ, துண்டு சிகரெட்டையோ வீணாக்காமல் ருஷ்யர்கள் உபயோகிக்கிறார்களாம். நாய்களே அங்கு அதிகமாக இல்லையாம், பூனைகளோ காணவே காணோமாம். வயிற்றுக் குள்ளே போய்விட்டதா? ஊரைவிட்டு போய்விட்டதா? என்று அவர் சொல்லவில்லை. நாடகம் சினிமா, டான்ஸ் நடக்கும் கொட்டகைகளில் ஏகப்பட்ட கூட்டமாம்.

தொழிற்சாலைகளோ இரவு பகல் என்று பார்க்காது சதா வேலை செய்த வண்ணமாகவே இருக்கின்றனவாம். மாஸ்கோ வாசிகள் பந்தாட்டம் நடக்கும் இடங்களிலும், சர்க்கஸ் கொட்டகைகளிலும் கூடி குஷியாக இருக்கிறார்களாம். தங்களது அரும் பெரும் தலைவரான ஸ்டாலினிடம் அவர்களுக்கு அவ்வளவு அபார நம்பிக்கையாம். யுத்தத்திற்காக அரசாங்கம் கடன் கேட்கிறது என்றால், இமைப்பதற்குள் ஏராளமான பணம் வந்து குவிந்து விடுகிறதாம். போதும், போதும் என்று திருப்பிக் கொடுக்க வேண்டி வருகிறதாம்.

ஜெர்மானியர் இன்னும் தங்கள் நாட்டு மண்ணிலே தங்கி, ருஷ்ய நகரங்களைப் பாழ்படுத்தி, ருஷ்ய மக்களுக்கு அளவில்லாத அவஸ்தைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்களே என்பதை நினைக்கும் பொழுது மாஸ்கோ மக்களின் மனங்கள் புண்படுகின்றனவாம். மேற்கே இரண்டாவது போர்முனை ஆரம்பமாகாதா என்று ஒவ்வொருவரும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம். எதிர் காலத்தைப் பற்றி அவர்களுக்குச் சிறிது கூட பயமே இல்லையாம். ஆனாலும் யுத்தம் இழுத்துப் பறித்துக்கொண்டே நிற்பது யாருக்கும் கஷ்டமாகத் தானே இருக்கும்?

இந்திய வீரர்களின் புகழ், மலரின் மணம்போல், எங்கும் பரவிக்கொண்டிருக்கிறது. சென்ற இடங்களில் எல்லாம் அவர்கள் போடுபோடென்று போடுகிறார்கள். எதிரிகளும் கண்டு ஆச்சரியப்படும் வகையில், உயிரைத் திரணமாக மதித்துப் போராடுகிறார்கள். அவர்களது சேவையை நேசதேசத்தாரும், முக்கியமாக பிரிட்டிஷாரும் மறக்கவே முடியாது. அவ்வப்பொழுது வெளி நாட்டினர் இந்தியப் படைகளைப் பாராட்டிக் கொண்டே தானிருக்கிறார்கள்.

இந்தியப் படைகளுக்குப் புகழ் மாலை

இந்தியர்களில் பலர், பிரிட்டிஷ் எட்டாவது சேனையோடு சேர்ந்து இத்தாலியில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக சாங்க்ரோ என்ற நதியைக் கடக்கும்பொழுது அவர்கள் காட்டிய மனோதிடமும், திறமையும் ஏற்கெனவே போற்றப்பட்டுவிட்டன.

இப்பொழுது, இந்திய மாலுமிகளை கானடியர் புகழுகிறார்கள். வட அட்லாண்டிக் கடலிலே எத்தனையோ நேசதேச வியாபாரக் கப்பல்கள் சதா போய் வந்துகொண்டிருக்கின்றன. அவற்றிலே இந்திய மாலுமிகள் பலர் வேலைசெய்து வருகிறார்கள்.

இருபது கம்பளிகள் போர்த்துக் கொண்டாலும் வெடவெடவென்று நடுக்கும் குளிர் அங்கே! அந்தக் குளிரிலே, இந்திய மாலுமிகள் கலங்காது கப்பலை ஓட்டிக் கொண்டு போயிருக்கிறார்கள். அதோடுகூட, அங்கெல்லாம் எந்த நிமிஷத்திலே ஜெர்மன் நீர்மூழ்கிகள் தோன்றுமோ என்ற பீதி வேறே எல்லோருக்கும் இருந்து கொண்டே இருக்கும்.

போனவாரம் கூட, வட அட்லாண்டிக்கில் ஒரு பெரிய நீர்மூழ்கிக் கூட்டம் கூடியிருந்ததாம். அதனை பிரிட்டிஷ் வேவு விமானங்களும், பாராக் கப்பல்களும் தங்களது கழுகுப் பார்வையால் பார்த்து விட்டன. அவ்வளவு தான்! அந்தத் திருட்டு நீர்மூழ்கிக் கூட்டத்தைத் தாக்க குண்டு விமானங்கள் இளம்பிவிட்டன. அந்த நீர்மூழ்கிக் கூட்டத்திலே ஐந்தாறு 'க்ளோஸ்'. பாக்கி யெல்லாம் காயத்தோடு காற்றாகப் பறந்து போய்விட்டனவாம்.

உலக க்ஷேமத்திற்காக, ஊரைவிட்டு, நாட்டைவிட்டு, மனைவி மக்களை விட்டு, உளுந்து வடை, இட்லி காபி, சப்பாத்தி, சாயா என்ற சபலம் ஏதுமின்றி, பதினாயிர மைல்களுக்கப்பால், கண்காணாத பகுதிகளிலே வீரத்துடன் போராடும் அல்லது அத்யாவசியமான சேவை செய்யும் நமது இந்திய சகோதரர்கள் நீடூழி வாழட்டும்! சீக்கிரமே யுத்தம் முடியட்டும்! அந்த சகோதரர்களை நாமே வரவேற்று உபசரித்து வாழ்த்தலாமே!

ஜெர்மானியர்கள் ஐபம்

'இந்த யுத்தத்திலே ஜெயிக்காவிட்டாலும் பரவாயில்லை ஐயா! யுத்தத்தை தரைவழியாகவும் ஜெர்மனிக்குள் நுழைய விட்டுவிடாதே எங்கடவுளே!' என்று அசல் ஜெர்மனியில் உள்ள ஒவ்வொருவரும் ஹிட்லர் இருக்கும் திசையை நோக்கிச் சொல்லிக் கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறோம்.

ருஷ்யர்களின் உண்மை சக்தி தான் என்ன என்பது உலகறிந்த ரகசியமாயிற்றே! எல்லோரையும் விட, இந்த 'பாயிண்ட்' ஜெர்மானியருக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டுமே! உலகம் உள்ளளவும், இந்த இரண்டாவது மகாயுத்தத்திலே ருஷ்யர்கள் ஜெர்மானியருக்குக் கொடுத்த பூசையை ஒவ்வொரு சரித்திரக்காரரும் சொல்லாமல் விடப் போகிறார்களா என்ன?

இப்படிப்பட்ட ருஷ்யர்களை ஜெர்மனிக்குள் புக விட்டுவிட்டால், அப்புறம் தலைதூக்கவே முடியாது என்பது ஜெர்மானியருக் கெல்லாம் தெரியும், போன மகா யுத்தத்தில் கூட, ஜெர்மானியர், தம் எதிரிகளை தங்கள் நாட்டிற்கு வெகு தூரத்திலேயே நிறுத்தி வைத்துக் கொண்டு தான் போராடிக் கொண்டிருந்தார்கள். ஜெர்மனியின் உள் பலம் குறைகிறது என்று தெரிந்ததும், 'ஐயா', போறுமையா சண்டை! ராஜி பேசலாம் வாருங்கள்!' என்று அழைத்து விட்டார்கள். சண்டையும் நின்றுவிட்டது. ஜெர்மனியும் தப்பிக் கொண்டது.

ஆனால், இப்பொழுதோ, அவ்வளவு லேசாக ஜெர்மனியை விட்டுவிட யாரும் தயாராக இல்லை. போறுமே ஒருதரம் போயிட்டுப் போகட்டும் என்று விட்டது. அதன் பலன் தான், இருபது வருஷங்கள் கழிந்ததும் இந்த இரண்டாவது மகாயுத்தம் ஆரம்பமாகி யிருக்கிறது. இப்பொழுதும் முன்போலவே ஜெர்மானியரை மன்னித்து விட்டு விடுவதானால், இன்னும் பத்துப் பதினைந்து வருஷங்களுக் குள்ளாகவே, மற்றொரு யுத்தத்தை எதிர்பார்க்கலாம் நாம். அதற்கு உலகம் தயாராக இருக்குமா? எதிர் காலத்தில் யுத்தம் நடப்பதானால், அதனால் ஏற்படக்கூடிய நாசங்கள், இப்பொழுது நடக்கும் யுத்தத்தால் ஏற்படும் நஷ்டங்களைப் போல் லக்ஷம் மடங்கு அதிகமாக இருக்கும் என்பதில் சந்தேகமே யில்லை. இப்பொழுது லக்ஷக் கணக்கில் ஜனங்கள் மடிகிறார்கள். எதிர் காலத்தில் கோடிக கணக்கில் மடியக் கூடும்.

கோடி கோடியாய்ப் பாழ் படுத்தினால்?

கஜானாவிலே எவ்வளவுதான் பணமிருந்தாலும், மேற்கொண்டு வரக்கூடிய வரவையும் மனசில் கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாகச் செலவழித்தால் தான், காரியமும் நடந்து கொண்டிருக்கும்; கஜானாவும் காலியாகாது. மேட்டூர் அணை இருக்கிறது. அது எதற்காக இருக்கிறது? வருகிற ஜலத்தை யெல்லாம் சேகரித்து நிறுத்திக் கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாகத் தேவை இருக்கும் பொழுது மட்டும் செலவழித்துக் கொள்ளத் தானே? பூரா மடைகளையும் கோடை காலத்தில் திறந்தே வைத்துவிட்டால், ஜலம் பாயும் அழகு பார்க்க ஜோராகவே இருக்கும். ஆனால், சேமிப்பு ஜலமெல்லாம் காலியாகி விடுமே ஐயா? அதே போல், உலகத்தில் உள்ள மக்களின் மொத்தத் தொகையே நானூறு கோடிக்கும் குறைவுதான். அப்படியிருக்க, அதை கோடி, கோடியாகப் பாழ்படுத்தினால் உருப்படுமா என்ன?

ஆகவே எதிர்காலத்திலே, அதுவும் சமீப காலத்திலே, ஒரு நூறு வருஷங்களுக்காவது யுத்தமே உலகில் எந்த பாகத்திலும் தலைகாட்டமுடியாதபடி செய்துவிடவேண்டு மென்பதே நேசநாட்டினரின் உயர்ந்த லக்ஷ்யமாக இருந்து வருகிறது. அதனால் தான், அவர்கள், தேள், நட்டுவாக்களி ஆகியவற்றைக் கண்டால், 'கொடுக்கை நறுக்கி எறி' என்கிறார்களே அதுபோல், ஜெர்மனியின் போராடும் சக்தியை யெல்லாம் பிழிந்தெடுத்து விடுவது, ஜெர்மனியை நிபந்தனையின்றிச் சரணடையச் செய்வது, எதிர்காலத்தில் ஜெர்மனிமீது நேசநாடுகள் நிரந்தரமாக ஒரு கண் வைத்திருப்பது என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

எங்கே தீர்மானித்தார்கள் என்று கேட்கிறீர்களா? நேச நாடுகளில் முக்யமான வல்லரசுகளாகிய பிரிட்டன், அமெரிக்கா, ருஷ்யா ஆகிய மூன்றின் தலைவர்களும் சமீபத்தில் டெஹ்ரானில் சந்தித்தார்கள் அல்லவா? அப்பொழுதும், அதற்கு முன்பாகவே அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலே, ஒரு கப்பலிலே முதன் முதல் சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும் சந்தித்தார்களே அன்று முதலே அவர்கள் சந்திக்கும்பொழுதெல்லாம் மேற்கண்ட மாதிரி தான் முடிவு கட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சென்ற மகா யுத்த முடிவிலேயும் ஜெர்மனி தோற்றுப் போகத் தான் செய்தது. இம்முறையும் அதற்கு அதே கதிதான் ஏற்படப் போகிறது. ஆனால் போன யுத்தத்திற்கும், இதற்கும் ஒரு முக்யமான வித்யாசம் உண்டு. போன யுத்த முடிவிலே, ஜெர்மனி நொந்துபோயிற்று; ஆனால் இந்த யுத்த முடிவிற்குள் ஜெர்மனி நொறுங்கிப் போய்விடும். அதைப் பிய்த்து எறிந்து விடுவதென நேசதேசத்தவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். அதற்கான திட்டங்களும் போட்டாகி விட்டது.

எல்லா விஷயங்களும் அற்றுபடி யாயின

ரூஸ்வெல்ட்டும், சர்ச்சிலும், ஸ்டாலினும் கூடிப் பேசினார்களே டெஹரானில், அப்பொழுது எல்லா விஷயங்களும் அற்றுப்படியாகி விட்டன. ஜெர்மனியை எப்பொழுது, எப்படி நிழல் போலச் சென்று கௌவுவது என்பது பற்றி யெல்லாம் அவர்கள் ஆராய்ந்து, முடிவு கட்டி விட்டார்கள்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஜெர்மனிக்கு மேற்கேயிருந்தும், தெற்கேயிருந்தும் ஜெர்மனியைத் தாக்குவது; அதே சமயம் கிழக்கேயிருந்து ருஷ்யர்கள் பெரும் போடாகப் போடுவது என்று பேசிக் கொண்டார்களாம். அவ்வாறு போட்டால், ஜெர்மனி என்ன தான் செய்யுமோ தெரியவில்லை.

நேசதேசத் தலைவர்கள் ஒற்றுமையாகக் கூடிப் பேசி, "உதைத்தே தீரவேண்டும்" என்று தீர்மானித்தது ஜெர்மன் தலைவர்களுக்கு, கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை. எப்படிப் பிடிக்கும்? போலீஸ்காரன் ரோந்து வருகிறான் என்றால், திருடன் சந்தோஷப்படுவானா? வாய் விட்டோ திட்ட முடியாது. மனசிற்குள் முணுமுணுத்துக் கொண்டே, பதுங்கப் பார்ப்பான்.

ஜெர்மானியர் தகல்பாஜி வேலைகள்

அதே ரீதியில்தான், ஜெர்மன் ரேடியோவும், ஜெர்மன் தலைவர்களும், நேசதேசத் தலைவர்களின் சந்திப்பைக் குறித்து கன்னா பின்னா என்று பேசி இருக்கிறார்கள். வேறொன்றும் செய்யக் கையாலாகாது போகவே, ஜெர்மானியர் விமானங்களில் ஆட்களைக் கொண்டு சென்று, டெஹ்ரான் நகர் அருகே இறக்கி விட்டு விட்டார்களாம். அவர்கள், நேசதேசத்தவர்களுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்யும் எண்ணத்தோடு இருந்தார்கள். ஆனால் அவர்களை நேசதேசத்தவர்கள் கண்டு பிடித்து, தண்டித்து விட்டார்கள். இந்த "தகல்பாஜி" வேலைகள் எல்லாம் நேசதேசத்தாரிடை ஏற்பட்டுள்ள ஒற்றுமையைக் குலைத்து விடுமா என்ன?

ஒட்டக் கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாப்பாள் என்று சொன்னாளாமே சோழன் மனைவி. அது போல, நாஸிகள் செய்த சேஷ்டைகளுக்கு, இதோ பதில் என்பது போல், ரூஸ்வெல்ட், சர்ச்சில் ஆகிய இருவரும் துருக்கி நாட்டுத் தலைவரை கெயிரோவிற்கு வரவழைத்துப் பேசினார்கள்.

துருக்கி இன்னும் நடுநிலைமை நாடாகவே இருக்கிறது. அந்நாட்டிலே யுத்தம் செய்வதில் நிபுணர்கள் பல்லாயிரவர் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய தெல்லாம் ஆயுதங்கள் தான். பிரிட்டன் அந்த ஆயுதங்களைத் துருக்கிக்குக் கொடுத்தால், துருக்கி மகா பலிஷ்ட நாடாகிவிடும்.

இப்பொழுது அதைச் சுற்றி எங்குமே யுத்தமாக இருக்கிறது. அதோடு, பல வருஷங்களுக்கு முன் அது பிரிட்டனோடு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது. அதன்படி அவ்விரண்டு நாடுகளிடை ஏதேனு மொன்றை, ஏதேனும் ஒரு வெளி நாடு தாக்குமானால், அம்மாதிரி தாக்கும் நாட்டை, சும்மா இருக்கும் நாடு தண்டிக்க முன்வர வேண்டும். ஆனால் வழக்கத்தில், இதுவரை துருக்கி அப்படி ஒன்றும் செய்துவிட வில்லை. இதுவரை அதன் தயவும், பிரிட்டனுக்கு இல்லாமல் முடியாது என்ற நிலைமை ஏற்பட வில்லை. ஆகவே, "என்ன மிஸ்டர் துருக்கி? ஒப்பந்தப் பிரகாரம் நடக்கலாமே நீங்கள்!" என்று கேட்க வேண்டிய பிரமேயம் ஏற்பட வில்லை.

ஆனால் சமீபத்திலே, துருக்கிக்கு ஒரு சில மைல்களுக்கு அருகே யுள்ள லீராஸ், சாமாஸ் தீவுகளை ஜெர்மனியர் பலமாக விமானங்களி லிருந்து தாக்கிக் கைப்பற்றிக் கொண்டார்கள் அல்லவா? துருக்கியிலே நேசதேசத்தவர்களுக்குச் சலுகை இருந்திருந்தால் (போர்ச்சுகல் தேசம் தனது அஸோர்ஸ் என்ற தீவிலே நேசதேசத்தாருக்கு விமானங்களை நிறுத்த இடம் கொடுத் திருக்கிறதே அது மாதிரி), துருக்கியி லிருந்து சண்டை விமானங்கள் பாய்ந்தோடி யிருக்கு மல்லவா?

அடுத்தாப் போல, பால்கன் பிரதேசத்தின் மீது நேசதேசத்தவர்கள் பாயக் கூடும் என்று தோன்றுவதால், துருக்கியின் தயவு பூரணமாக

வேணும். அது நேரடியாக யுத்தத்தில் சேர்ந்து விட்டாலோ கவலையில்லை. அப்படி அது நடு நிலைமையையே வகித்திருக்க விரும்புமானால், அது தன் நாட்டிலே நேசதேசத்தவர்களுக்குச் சில சௌகரியங்களைச் செய்து கொடுத்தால் போதும். அதாவது சில விமான தளங்களை உபயோகிக்கவும், துருக்கி வழியாக உதவிப் பொருள்கள் போகவும் இடம் கொடுத்தால் போதுமே!

சட் புட் என்று நாஜிகள் ஒழிவார்கள்

இப்பொழுது, தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போலல்லவா, பனிக்கட்டி நிறைந்திராத சமயமாகப் பார்த்து வடகடல் வழியாகவோ அல்லது பாரசிக தேசத்து வழியாகவோ ருஷ்யாவுக்கு உதவிப் பொருள்களை அனுப்பி வந்திருக்கிறார்கள். துருக்கி வழியாகப் போக வசதி ஏற்பட்டால் சட் புட் என்று வெகு சீக்கிரமே ருஷ்யர்களிடம் சாமான்கள் போய்ச் சேரும். சட் புட் என்று நாஜிகளுக்கும் உதை விழும்.

அதோடு துருக்கி விமானக் கூடங்களிலிருந்து, ருமேனியா, பல்கேரியா ஆகிய நாடுகளை ஒரு கை பார்க்கலாமல்லவா? இதற்கெல்லாம் துருக்கியை கேட்க வேண்டுமல்லவா? அதையெல்லாம் தான் துருக்கி தலைவரிடம், நேசதேசத்தவர்கள் கேட்டிருக்கிறுப் போலிருக்கிறது.

துருக்கியின் மனோபாவம் என்ன என்பதை அறிய எல்லோருமே ஆவலாக இருப்பார்கள். நேசதேசத்தாரிடம் துருக்கி தனது அனுதாபத்தையெல்லாம் காட்டுகிறது; காட்டத் தயாரா யிருக்கிறது இப்பொழுது என்று பல அர்த்தங்கள் நிறைந்த ராஜதந்திர பாஷையில் சொல்லலாம் போலிருக்கிறது.

ஓரிரண்டு வருஷங்களுக்கு முன்பாக ஜெர்மனி, பேரலை போல ருஷ்யா மீது பாய்ந்து சென்ற பொழுது, துருக்கிக்குக் கொஞ்சம் யோசனையாகத் தானிருந்திருக்கும். ஒரு காலாடி தன் சகாக்களோடு குஷியாகத் தெருவில் போகிறான் என்றால், பெண்கள் சற்றுப் பயந்து தூரத்தில் ஒதுங்குவது இயற்கை தானே? அதே போல போகிற ஜோரில் நம் மேலேயும் இடிக்காமல் போக வேண்டுமே இந்தத் தடியன் என்று துருக்கி நினைத்த காலமும் உண்டு. ஆனால், இப்பொழுது ஜெர்மனியின் நிலைமையே மாறிவிட்டது அல்லவா? ஜெர்மனியைப் பகைத்துக் கொண்டால் கூட கவலை இல்லை. போர்ச்சுகல் தேசம் நேசதேசத்தார்க்குப் பகிரங்கமாக உதவி செய்ததே அதை ஹிட்லர் என்ன செய்து விட்டார். இதே 1939, 1940 வருஷத்திலே ஹிட்லர் என்ன செய்திருப்பார்? காலம் மாறி விட்டதா இல்லையா?

துருக்கி பயப்படவே பயப்படாது

ஆகவே, துருக்கி இப்பொழுது பயப்படவே பயப்படாது. அதன் மீது போர் தொடுத்துப் பாய்ந்து வர ஹிட்லரிடம் வேண்டிய சௌகரியங்கள் இல்லை. அவருக்கும் உள்ளூரக் கொஞ்சம் யோசனையாகவே இருக்கிறுப் போலிருக்கிறது. இல்லா விட்டால், துருக்கியை ஒட்டினுப் போல் இருக்கும் பல்கேரியாவிலே நிறையப் படைகளைக் கொண்டு வைத்திருக்கிறாராமே அது எதற்கு? பல்கேரியாவின் தலை நகரான சோபியா அருகே பல விமானக் கூடங்களைக் கட்டி, அங்கே சண்டை விமானங்களை நிறையக் கொண்டு வைத்திருக்கிறாராமே அது ஏன்? துருக்கி வழியாகவோ, வேறு வழியாகவோ பால்கன் பிரதேசத்தின் மீது நேசதேசப் படைகள் பாயக் கூடும் என்று தீர்மானித்து விட்டார் அவர் என்று தெரியவில்லையா? போன வாரம் ஓரிரு தடவைகள் சோபியா மீது கூட நேச விமானங்கள் பிரத்யக்ஷமாகிச் சென்றிருக்கின்றனவே! நேசதேசத் தலைவர்கள் சந்தித்ததற்கும் ஜெர்மனியைப் பல திசைகளிலிருந்தும் தாக்கப் போகிறார்கள் நேசதேசத்தார் என்ற பேச்சு எங்கும் பரவிக் கிடப்பதற்கும், ஹிட்லரும் அவரைச் சேர்ந்த நாஜிகளும் உஷாராக இருக்க வேண்டியது நியாயந் தானே?

டெஹ்ரானிலும், கெய்ரோவிலும் சந்தித்துப் பேசிய பின், ரூஸ்வெல்ட் துரை மால்டா, ஸிஸிலி ஆகிய தீவுகளையும் பார்வையிட்டு விட்டு, அங்குள்ள நேசதேச வீரர்களை வாயாரப் புகழ்ந்து சென்றிருக்கிறார். அதிலும் மால்டா வாசிகளை எவ்வளவு புகழ்ந்தாலும் போதாது. அந்தத் தீவை குண்டு வீச்சிலே சுக்கு நூறாக்கித் தகர்த்து விடலாம் என்று நாஜிகள் கனவு கண்டு கொண்டிருந்தார்கள். உலகிலேயே அந்தத் தீவைப் போல் குண்டு வீச்சைத் தாங்கிய பிரதேசம் எதுவுமே இராது என்று தைரியமாகச் சொல்லலாம். அத்தனையையும் சமாளித்துக்கொண்டு, பல கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு, பிரிட்டிஷ் வல்லரசுக்கே ஒரு மகத்தான பெருமையை சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார்கள் மால்டாவை காத்த வீரர்கள். இன்று அதே தீவு, ஜெர்மானியரைக் கதி கலங்க அடிக்க வைப்பதற்கான உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறது. இத்தகைய தோர் சிறப்பு மிக்க தீவை, ரூஸ்வெல்ட் துரை பார்த்து மகிழ்ந்தாராம். அமெரிக்கர் சார்பிலே அங்குள்ளவர்களுக்கு பாராட்டுதல்களை அளித்து விட்டு, "யுத்தம் முடியும் வரை நாம் முன்னேறிக் கொண்டே இருப்போம். பிரிட்டனும், அமெரிக்காவும், தோளோடு தோள் சேர்த்து இறுதி வரை நின்று, உலக சமாதானத்தைக் குலைத்த அரக்கனை ஒழிப்பதோடன்றி, இந்த வெற்றியால் உலகமே எந்நாளும் பயன் பெற வழி செய்யத் தான் போகின்றன" என்றும் கூறி யிருக்கிறார்.

கொலை பாதகர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்

இவர் இப்படிச் சொன்னாரா? சீமையிலிருந்து சைமன் பிரபுவும், மற்றொரு பிரபல எழுத்தாளரான பிரபு ஒருவரும் என்ன சொல்லி யிருக்கிறார்கள் தெரியுமா? "இந்த யுத்த சம்பந்தமான கொலை பாதகர்கள் எல்லாம் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். அந்தக் கொலை பாதகர்கள் யார், யார் என்ற ஜாபிதா அவ்வப்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. வார்ஸா நகரத்தை தூளாக்கினார்களா? ஸ்டாலின்கிராடைப் பாழாக்கினார்களா? கியெப் அருகே பதினாயிரக் கணக்கான ருஷ்யர்களைக் கொளுத்தினார்களா? யாரோ ஒருவர் ஒரு ஊரில் ஒரு குற்றம் செய்தார் என்பதற்காக நூற்றுக் கணக்கில் அவர் இனத்தவர்களைப் பிடித்துச் சுட்டுக் கொன்றார்களா? சரி! எல்லாம் கணக்குப் புஸ்தகத்தில் ஏறிக் கொண்டிருக்கிறது. யுத்தம் முடிந்ததும் இம்மாதிரிப் பேர்வழிகளையெல்லாம் தக்க நீதிபதிகளின் முன் நிறுத்தி விசாரித்துக் கடுந் தண்டனைக்குள்ளாக்கத் தான் போகிறோம்" என்றார் சைமன் பிரபு.

"ஹிட்லர் அண்டு கோ முழுவதையுமே தூக்கில் போட வேண்டும். ஜெர்மனியில் அந்தக் கம்பெனியார் ஊசி யேற்றியது போல் ஏற்றி யிருக்கும் நாஜி தத்துவங்களையே ஜெர்மன் குழந்தைகள் அறியாதபடி செய்து விடவேண்டும். பல வருஷங்களுக்கு சரித்திரப் பாடமே இல்லாதபடி செய்து, புதுச் சரித்திரப் புஸ்தகங்கள் எழுதி வைக்க வேண்டும். உலகத்தைச் சீரழித்த பாதகர்களைக் கொத்த வேணும்" என்கிறார் பான் சிடார்ட் என்ற பிரபு.

இவற்றை யெல்லாம் கேட்கக் கேட்க, நாஜிகளுக்கு ஜுரம் கண்டு கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமே யில்லை. அவர்களும் சும்மா இல்லை. ஏதேதோ ஏற்பாடுகள் செய்து கொண்டு தானிருக்கிறார்கள். முதல் ஏற்பாடு தலை தப்ப வழி செய்யும் ஏற்பாடு தான். ஆனால் தலைக்கு மேலே ஆகாயம் தானே இருக்கிறது. ஜெர்மனிக்கு மேலே ஆகாயமே இல்லாமல், இல்லா விட்டால், அந்த ஆகாயம் தணிந்து வந்து, அங்குள்ள வீட்டு மாடிகளின் முகடுகளைத் தொட்டுக் கொண்டிருந்தால் கூட, தேவலை என்று ஜெர்மானியருக்குத் தோன்றக் கூடும். ஏனென்றால், மேலே ஆகாயம் இருப்பதால் தானே நேசதேச விமானிகள் கும்பல் கும்பலாக வந்து, ஜெர்மானியர் வசமுள்ள பிரதேசங்கள் மேலெல்லாம் குண்டு வீசி விளையாடிக் கொண்டே இருக்கிறார்கள்!

நேசதேசத்தார் ஐரோப்பா மீது படையெடுக்கப் போவது நிச்சயம் என்பதை நாஜித் தலைவர்களும் உணர்ந்திருக்கிறார்கள். இல்லா விட்டால் ரோமல் ஐயா டென்மார்க் எங்கே, நார்வே எங்கே என்று போய், பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வை யிடுவாரா?

போன வாரம் ஒரு தமாஷ் பாருங்கள். நேசதேசக் கப்பல் கூட்டம் ஒன்று, வேண்டுமென்றே நார்வேக்கு இருநூறு மைலுக்கு உள்ளாகவே சென்று, தான் வந்திருப்பது நாஜி சூரர்களுக்குத் தெரியும்படி செய்திருக்கிறது. அப்படியும் நாஜிக் கப்பற் படை வெளியே வருமா என்று பார்த்திருக்கிறார்கள். ஹூஹூம்! அசையவே இல்லை நாஜிக் கப்பற்படை. நேசதேசக் கப்பற் படைக்கு ஏற்பட்டுள்ள நூதன பலத்தின் பெருமை நாஜிகளுக்கும் தெரிந்திருக்கிறது என்று சொல்லலாமா கூடாதா?

1944-ல் பல இடங்களில் கடும் போர்

1944-ம் வருஷம் பிறந்தால், இன்னும் கடுமையான போர்கள் பல இடங்களில் நடக்கக் கூடும். ஜெர்மனியின் பலம் முழுவதும் குன்றவில்லை. இன்னமும், ஜெர்மானியர், இத்தாலியிலும், ருஷ்யாவிலும் பல இடங்களில் பலமாக எதிர்த் தாக்குதல்களை நடத்துவதைப் பார்த்தால், மேற்கண்டபடி நினைக்கவே தோன்றுகிறது.

இத்தாலியிலே ஒருபுறம் ஐந்தாவது சேனையும், மற்றொரு புறம் எட்டாவது சேனையும் முன்னேறிய வண்ணமாகத் தானிருக்கின்றன. ஒரே மலைகளும், ஆறுகளும் நிறைந்த நாடானதாலும், நாஜிகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் நன்றாக வேரூன்றி நிற்பதாலும், மெல்ல மெல்லத் தான் முன்னேற முடிகிறது.

பிரிட்டிஷ் ஐந்தாம் சேனை வெகு சிரமப்பட்டு மான்டிகாமினோ என்ற மலை உச்சியைப் பிடித்து விட்டது. இங்கிருந்து கொண்டு ரோமாபுரி செல்லும் பாதையை நன்றாகப் பார்க்கலாம். மேற்றிசையிலிருந்து ரோமாபுரியை அடைய வரும் பாதையைப் பாதுகாக்க தூரத்திலே இந்த மலை உச்சியைத் தான் நம்பி யிருந்தார்கள் நாஜிகள். இது கோவிந்தா ஆகிவிட்டது. இன்னும் பல சிரமங்கள் இருக்கின்றன ரோமாபுரியை அடையு முன். அதையெல்லாம் நம்மவர்கள் தான் லக்ஷ்யம் செய்வதாக இல்லையே!

நொண்டி முஸோலினி ஒரு படை சேகரித்திருக்கிறாராம். அது கூடிய சீக்கிரமே போரரங்கத்திலே காட்சி கொடுக்கப் போகிறதாம். வரட்டுமே! அதற்கும் பூஜை போட்டு விட்டுப் போகிறார்கள் நம்மவர்கள்.

ருஷ்யாவிலே கியெப் நகருக்கு மேற்கே ஜெர்மானியப் படைத் தலைவர் சுமார் ஆயிரத்து எழுநூறு டாங்கிகள் வரை சேகரித்துக் கொண்டு, ருஷ்யப் படைகளை ஆத்திரத்தோடு தாக்கிக் கொண்டிருக்கிறாராம். அவருக்குக் கொஞ்சம் வெற்றி கிடைத்ததானாலும், அது நீடித்திருக்குமென்று தோன்ற வில்லையாம். ருஷ்யர்கள் எலிவாணம் மாதிரி எல்லாப் பக்கங்களிலும் கிளைகள் போலப் பிரிந்து சென்று, நாஜிப் படைகளை அமுக்கப் பார்க்கிறார்கள். நாஜிப் படைத் தலைவர் வந்தது வருகிறது என காரியங்களைச் செய்கிறுப் போலிருக்கிறது. நாளுக்கு நாள் அவரது டாங்கிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. புதிதாக டாங்கிகள் மளமளவென வருவதற்கு வகையில்லாமல் ரயில்வே பாதைகளைத் தகர்த்து விட்டார்கள் வீர ருஷ்யர்கள். ரஸ்தா பாதை வழியாகத் தான் வர வேண்டும். இப்பொழுதென்ன ஸ்வாமி புறப்படுவது போல், வழியாக, பயமில்லாமல், மேள தாளங்களோடு ஜெர்மனியிலிருந்து டாங்கிகள் ருஷ்யா வந்து சேர்ந்து விட முடியுமா என்ன? வழியிலே எவ்வளவு கொரில்லாப் படைகளைத் தப்பவேண்டும்? எவ்வளவு நேசதேச விமானங்களுக்குக் கடுக்காய் கொடுக்க வேண்டும். இதெல்லாம் லேசா என்ன? ஆகவே, வான்மான்ஸ்டீன் துரை செய்கிற காரியம் ஆபத்தான காரியம் தான். டாங்கிகள் குறையக் குறைய என்றோ ஒரு நாள் திடீரென்று அவரது அணி வரிசையில் பெரிய ஓட்டை விழுந்து விடக் கூடும். அதிலே ருஷ்யர்கள் புகுந்து விட்டால் ஒரே பாய்ச்சல் தான்!

நாஜிகள் சென்ற சில காலமாக, வட ருஷ்யாவில் உள்ள லெனின்கிராட் நகரத்தை இடைவிடாது குண்டு வீசித் தூளாக்கப் பார்க்கிறார்கள். இவ்வாறு ஊரையே நாசமாக்கி விட்டால், 'இந்தப் பாழாய்ப்போன ஊரைப் பற்றி இனி காலத்தையும், கருத்தையும் செலவிட வேண்டாம்' என்று ருஷ்யர்கள் நினைத்து, அந்தப் பக்கம் அதிகம் வராது போய் விடக் கூடும் என்று நினைத்தே, இப்படி சதா குண்டு வீசுகிறார்கள் போலிருக்கிறது.

பொதுஜனப் போக்கு வரவிற்கு ரயில் இல்லை

ருஷ்யர்கள் குளிர் காலப் போரை இன்னும் மும்முரமாகத் தொடங்கவில்லை. அதற்குள் நாமே பாய்லாமே எனும் எண்ணத் தோடேயோ என்னமோ, ஹிட்லர் ஏராளமான படைகளை ருஷ்யா அருகே கொண்டு குவித்துக் கொண்டிருக்கிறாராம். போலந்து, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளில் எல்லாம் சென்ற சில வாரங்களாகப் பொது ஜனப்போக்கு வரத்து ரயில்களே நின்று விட்டனவாம். ஒரே ராணுவ ரயில்களாகவே ஐந்து நிமிஷத்திற்கு ஒன்றாகப் போய்க் கொண்டிருக்கிறதாம். மேற்கே இரண்டாவது போர் முனை ஆரம்பமாகி விட்டால், இம்மாதிரி போக இடமிருக்குமா? அது இல்லாமல் போய் விடுமே என்று தான் இப்பொழுதே முந்திக் கொள்ளுகிறார்கள் போலிருக்கிறது நாஜிகள்.

இங்கே கீழ்த்திசையிலே, அதிக ஸ்வாரஸ்யமாக எதும் போன வாரத்தில் நடக்கவில்லை. சியாங்கே ஷேக் நேசதேசத் தலைவர்களைச சந்தித்துத் திரும்பிய பிறகு, மேற்கொண்டு என்ன நடக்கும் என்பதை அறிய நாம் ஆவலாக இருப்பது போலவே, ஜப்பானியரும் அறிய ஆவலாக இருப்பார்கள். ஜப்பானில் போய் இறங்காமலே, ஜப்பானியரைத் திணற அடிக்கலாம் என்கிறார் ஒருவர். தெற்கே பஸிபிக் பிரதேசத்திலே, ஜெனரல் மாக்ஆர்தர் தூங்க வில்லை. ஜப்பானியர்களையும் தூங்க விட வில்லை. இந்தியா-பர்மா எல்லையிலே அவ்வப்போது ருசிகரமான சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. 'இனி இந்தியா மீது ஜப்பானியர்' படையெடுப்பது என்பது நடக்காத சமாசாரம். ஆனால் அவர்கள் சில இந்திய நகரங்கள் மீது குண்டுகள் வீச முயலக் கூடும். ஆயினும் நாம் வேண்டிய பாதுகாப்புக்களோடு அவர்களை உதைக்கச் சித்தமாகவே இருக்கிறோம்' என்று இந்திய சேனாபதி கூறி யிருக்கிறார். ஜப்பானியர் தற்சமயம் ஒரு வேடிக்கையான காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நேசதேசக் கப்பல்களின் பெயர்களைத் தேடிப் பிடித்து, அவற்றை மூழ்கடித்துக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் ஒரு பெரிய அமெரிக்க யுத்தக் கப்பலை மூழ்கடித்ததாகவும், அந்தக் கப்பலின் பெயர் இன்னதென்றும் ஜப்பானியர் சொன்னார்களாம். அந்தக் கப்பல் இன்னும் பூராவாகக் கட்டப்பட்டு ஜலத்தில் மிதக்க விடப்படவே யில்லை என்பதைக் கேட்கும் பொழுது, யார் தான் சிரிக்க மாட்டார்கள்!

புதிய கடற்படை பீரங்கிப் பயிற்சிசாலை

ஒரு முக்கியமான சம்பவம்

கராச்சியிலுள்ள கவாத்து மைதானம் வெய்யிலின் கொடுமையினால் வெடித்திருந்தது. அங்கே பீரங்கிகள் அணியணியாக வைக்கப்பட்டிருந்தன. கடற் படையைச் சேர்ந்த இளம் உத்தியோகஸ்தர்களும் படையினரும் நிறைந்திருந்தனர். இந்த வைபவம், வைஸ் அட்மிரல் ஜே. எச். காட்ப்ரே சமீபத்தில் ஆரம்பித்து வைத்த புதியதோர் கடற்படைப் பீரங்கிப் பயிற்சி சாலையின் ஆரம்ப விழாவை யொட்டித் தான் நடை பெற்றது. கப்பற் படையின் வழக்கப்படி, இந்தக் கப்பலுக்கு 'எச்.எம்.ஐ எஸ். ஹிமாலயா' என்று பெயரிட்டனர்.

இந்த விழா நடைபெற்ற மைதானத்தைச் சுற்றிலும் வானமளாவிய பெரும் பெரும் கட்டடங்கள் அடுக்கடுக்கடுக்காக, வரிசையாக அமைந்திருந்தன. அவை ஒவ்வொன்றிற்கும், கப்பற்படையில் தலைசிறந்த வீரர்களின் பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன. அக்கட்டடங்களிலுள்ள அறைகளில் பீரங்கி சம்பந்தமான எல்லா நுட்பங்களையும் உணர்ந்து கொள்ளுவதற்கான சாதனங்க ளெல்லாம் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றைப் படித்துத் தெரிந்து கொண்டால், பீரங்கிப் பயிற்சித் துறையில் ஒருவர் பூரண பாண்டித்தியம் அடையலாம். ஆச்சரியப்படத் தக்க நுண்ணறிவோடு அமைக்கப்பட்ட இயந்திரப் பகுதியும் இவர்கள் பயிற்சிக்குப் பெரிதும் உதவுகிறது. மற்ற அறைகளில் தளவாடங்கள் சம்பந்தமாகவும், ஒரு கப்பற் படையினர் தெரிந்து கொள்ள வேண்டிய பிற பலவற்றையும் உணர்ந்து கொள்ளுவதற்குத் தேவையானவற்றைப் பயிலுவதற்குரிய பலவகைச் சாதனங்களும் அமைக்கப்பட்டிருந்தன. கப்பற் படை பீரங்கி வகைகளில் மிகவும் புதிய ஆயுதங்களையுங் கூடக் கையாண்டு பழகுவதற்கு, இங்கே வசதிகளுண்டு. மற்றொரு பகுதியில், நம் கப்பல்களையோ, அல்லது நம் கப்பல்களின் துணைபற்றிச் செல்லும் வியாபாரக் கப்பல்களையோ, தாக்க வரும் எதிரி விமானங்களைக் குறி தவருமற் சுடுவதற்கான புதிய இயந்திர வகைகளும் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. பீரங்கிப் பயிற்சியில் குறி தவருமலும் விரைவாகவும் சுட்டுப் பழக வேண்டிய தவசியம். இதற்கு இந்தப் புதிய பயிற்சிசாலையில் வேண்டிய வசதிகளிருந்தன. ஆசிரியர்களும் அத்துறையில் மிகவும் தேர்ச்சி யடைந்தவர்கள். இங்கே ஒரே சமயத்தில் அநேகம் பேர்கள் பயிற்சி பெறத்தக்கபடி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியக் கடற்கரையையும், கடற் பாதைகளையும் காவல் புரிவதில், இங்கே பயிற்சி பெறுகிறவர்கள், சிறந்து விளங்குவார்கள்.

இதற்கு முன்பு இந்த பீரங்கிப் பயிற்சி சாலை பம்பாயில் நடை பெற்று வந்தது. அங்கே இடம் நெருக்கமா யிருந்தது. என்றாலும், மிகச் சிறந்த முறையில் பயிற்சியளிக்கப்பட்ட தென்று வைஸ் அட்மிரல் காட்ப்ரே கூட அதன் ஆரம்ப விழா வன்று குறிப்பிட்டார். இவ்வார்த்தையை உண்மையான தென்று, இந்தியப் போர்க் கப்பல்கள் பல போர் முனைகளில் மெய்ப்பித்து விட்டன. உதாரணமாக, "சட்லெஜ்", "ஜம்னா", "பெங்கால்" ஆகிய போர்க் கப்பல்களின் தீரச் செயல்களையும் அவற்றால் கிடைத்த வெற்றிகளையும் குறிப்பிடலாம். என்றாலும் இந்தப் பயிற்சி சாலையில் பயிற்சி பெறும் மாணாக்கர்களுக்கு, பம்பாய் பயிற்சி சாலையில் போதுமான அளவு இடங் கிடைக்க வில்லை. எனவே தான் கராச்சியில் இந்தப் புதிய கட்டடங்களை அமைத்தனர்.

இந்தப் பயிற்சி சாலையின் ஆரம்ப விழாவன்று, வெள்ளையும் கடல் நீல நிறமும் கொண்ட கொடிகள் உயரப் பறந்தன. அந்தக் கவாத்து மைதானத்தின் ஒரு கோடியில் அமைக்கப்பட்டிருந்த மேடை மீது ஒரு கொடி மரம் நாட்டப்பட்டிருந்தது. அதன் மீது ஒரு வெள்ளைக் கொடியும் அட்மிரலுடைய கொடியும் பறக்க விடப்பட்டன. முன் புரத்தில், உத்தியோகஸ்தர்களும், அந்தப் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தவர்களும் இருந்தனர். அன்றியும் "பஹதூர்", "தில்வர்" ஆகிய பயிற்சிக் கப்பல்களிலிருந்து மாணவர்கள் பலரும் வந்திருந்தனர், அவர்கள் அனைவரும் தும்பைப் பூவைப் போன்ற வெள்ளை ஆடைகள் அணிந்திருந்தனர். தனக்கென வகுக்கப்பட்டிருந்த மரியாதை யணிவகுப்பை வைஸ்அட்மிரல் பார்வையிட்ட பிறகு, கொடி மர மேடைமீதேறி நின்று ஒரு சிறிய பிரசங்கம் செய்தார். அதில், ஜப்பானிய யுத்தத்தைக் குறித்து நேச நாடுகள் பெரிதும் கவனம் செலுத்தக் கூடிய இந்தக் காலத்தில், எல்லா வகைப் புதிய இயந்திரங்களையுங் கொண்டதோர் பீரங்கிப் பயிற்சி சாலையை ஆரம்பித்து வைப்பது மிகவும் பொருத்தந் தான் என்று குறிப்பிட்டார். மேலும், துப்பாக்கிப் பயிற்சி, பீரங்கிப் பயிற்சி, முதலிய பல வகைப் பயிற்சிகள் அளிப்பதிலும், இந்தப் பள்ளிக்கூடம் விசேஷத் திறமை வாய்ந்திருக்கின்ற தென்றும் தெரிவித்தார். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் இந்தப் படைக்கு ஆட்கள் திரட்டப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான பயிற்சி யளிப்பதில், இந்த பீரங்கிப் பயிற்சிசாலை பெரிதும் உதவும்.

ஆரம்ப விழா முடிந்தது. உடனே அங்கிருந்த மாணவர்களும் உத்தியோகஸ்தர்களும் தாம் பயின்று வருபவற்றை செய்து காட்ட முற்பட்டனர். அது, உண்மையிலேயே ஒரு போர்க் களமாகத் தான் காட்சியளித்தது. விமானங்களிலிருந்து கடலில் எறியப்பட்ட பொருட்களையும், மற்ற பொருட்களையும் குறிபார்த்துச் சுட்டார்கள். அவர்கள் விரைவாகவும், குறிதவருமலும் சுடுவதைக் கண்டு அங்கே வந்திருந்தவர்கள் பெரிதும் வியந்திருந்தார்கள்.

வைஸ் அட்மிரல் ஜே. எச். காட்ப்ரே.

அன்று மாலை "ஹிமாலயா" கப்பற் படையைச் சேர்ந்த சிப்பாய்கள், மற்ற கப்பற் படையைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு தேநீர் விருந்தளித்தனர். வைஸ் அட்மிரல் காட்ப்ரே, "ஹிமாலயா" கப்பற் படைத் தலைவரான கமாண்டர் ஜே. இ. கார்னிஷ், ஆர்.ஐ.என். அவர்களுடனும், மற்ற உத்தியோகஸ்தர்களுடனும் விருந்து நடத்துவோரிடமும் விருந்தாளிகளிடமும் சென்றார். இந்தப் பயிற்சி சாலையில் பயிலுகிறவர்களின் நன்மையைக் குறித்து மிகவும் அக்கரை கொள்ளப்படுவதை அங்கு விஜயம் செய்தவர்கள் நேரில் கண் கூடாகக் கண்டார்கள். அங்கேயுள்ள படையினருக்கு, வேலையில்லாது ஓய்ந்திருக்கும் போது வசதிகளோடு தூங்கவும், படிக்கவும், எல்லா வித வசதிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. உண்வுச் சாலைகளும் சிறந்த முறையில் அமைந்திருக்கின்றன. சிறந்த முறையில் உணவளிக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இன்பமாக பொழுது போக்க ஏராளமான துறைகள் அங்கே உண்டு. அங்கே உள்ள உத்தியோகஸ்தர்கள் வசிப்பதற்கான எல்லாக் கட்டடங்களும் எல்லா வகை வசதிகளுடனும் அமைந்திருக்கின்றன.

இந்த பீரங்கிப் பயிற்சிசாலை ஆரம்ப விழா, இந்தியக் கடற்படைப் பெருக்கத்தையும் இந்தியாவின் யுத்த முயற்சியையும் துரிதப் படுத்துவதற்கு அறிகுறியா யமையும்.

(6-ம் பக்கம் தொடர்ச்சி.)

முடியாது. ஜப்பானிய அரசர் ஜப்பானிய மக்கள் பூராவையும் ஒரு குடும்பமென பாவிக்கிறார். உலகம் பூராவும் தன்னுடைய இருப்பிடமாக விருக்க வேண்டு மென்று ஜப்பானிய அரசர் கருதுகிறார். ஹாக்கோ இச்சின் என்றவரது கொள்கைப்படி, ஜப்பானிய அரசர் உலகத்திலுள்ள எல்லா மக்களுடைய பிரதிநிதி. ஜப்பானிய அரசர் உலகுக்கே சக்ரவர்த்தி".

அரசரே, ராணுவத் தலைவராட்டும் பொம்மை யென்றால், அவரையே சக்ரவர்த்தியாகக் கருதும் மற்றவர்களை என்ன வென்று அழைப்பது ?

இந்தியர் மீதா ஜப்பானியருக்கு வெறுப்பில்லை !

ஜப்பானியர்களுக்கு இந்தியப் பொதுமக்கள் மீது வெறுப்பில்லை யென்று இந்தியர்களது சுயேச்சையை நிலைநாட்டி அகில ஆசிய புது அமைப்பு நிறுவ முன் வந்திருக்கும் ஜப்பானியர்களைப் பற்றி, வேறென்ன அறிய வேண்டும் ? போன வருஷம் விசாகப்பட்டணத்திலும், காக்கிநாடாவிலும் உண்டான விமானத் தாக்குதலும் சென்ற மாதம் சிலோன், மதராஸ், கல்கத்தா, சிட்டகாங் இங்கு இவைகளைத் தாக்கியதும் அன்பினாலா? பர்மாவிலிருந்து அரிசிக் கொள்ளையடிப்பது இந்தியர் மீது அன்பா ? இந்தியர்கள் பாடுபட்டு சம்பாதித்த கோடிக் கணக்கான ரூபாய்கள் மருந்து குண்டுகளாகக் கருகிப் போவதும் லக்ஷக்கணக்கான இந்திய மக்கள் அநேக ரண அரங்கங்களில் உயிர்ச்சேதம் அடைந்ததற்கும் யார் காரணம் ? ஜப்பானும் ஜெர்மனியுமல்லவா ? இதைப் பார்த்தால் 'படிப்பது ராமாயணம் இடிப்பது பெருமாள் கோயில்' என்ற நம் நாட்டு பழமொழி கவனத்துக்கு வருகிறது. இது தான் அச்சு நாட்டாரது சமாதானக் தாக்குதல். ஜப்பானிய ஆகாய குண்டுகளிரண்டில், வெடிகுண்டு அபாயத்தை விட, பொய் வதந்தி வானொலி குண்டு சேதத்திற்கு, நமது பொது மக்கள் சிக்கப் படாது.

பொய்ப் பிரசார குண்டுகள்

அச்சுப் பிரசுரத்திலேயே நாடு மீதும் நகரம் மீதும் சரமாரியாகக் குண்டு வீசி பாமர ஜனங்களது மனப்பான்மையை தகர்த்துகிறோம் என்று டம்பம் பேசிய காலம் மலையேறி விட்டது. இப்பொழுது லண்டன் ஸ்டாலின்கிராட் முதலிய நகரங்கள் மீது விழுந்திருக்கும் பாம்களின் அசல்வட்டி பன்மடங்கு சேர்ந்து ஜெர்மன் தலைநகராகிய பர்லின் வாங்கிக் கொள்கிறது, என்பதை அச்சு நாட்டார் வானொலியில் கேட்பதுடன், வெடி மருந்து மூலமாகவும் கேட்கிறார்கள். வார்ஸா, லண்டன் ஸ்டாலின்கிராடை தங்களது விமானங்கள் தாக்கிய போது, அங்குள்ள குழந்தைகள் அழும்போது சிரித்த டாக்டர் கொப்பல்ஸ், பர்லினில் நேச நாட்டாரது விமானங்கள் தாக்கும்போது இருந்தவர், ஜனங்கள் பயப்படவில்லை என்கிறார். "ஆழினும் முற்பகல் செய்யின் பிறபகல் விளையும்" என்பதை அவர் அறிவார். இனி அத்தாக்குதல் பற்றி அதிகமாக ஆர்ப்பாட்ட மிருக்காது. புதிய தாக்குதலாகிய சமாதானத் தாக்குதலுக்கு நமது பொது மக்கள் இடம் கொடாவிடில், நேச நாட்டாரது ராணுவ பலமும் ஆகாய விமான பலமும் அச்சு நாட்டாரது சகல தாக்குதல்களும் அடங்கிவிடும் என்பது உறுதி.

யுத்த நாட் குறிப்புகள்.

பிரிட்டனும் ஜெர்மனியும்.

டிசம்பர் 7.—மன்னர் பிரானுக்குக் காய்ச்சல்.

சமீபத்தில் ஜெனரல் ஸ்மட்ஸ் கூறியவை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கையாகாது என்று மிஸ்டர் அட்லி காமன்ஸ் சபையில் அறிவித்தார்.

ஜெர்மன் ரயில்வே தொழிலாளர்கள் பொதுக் கூட்டத்தில் டாக்டர் கொப்பல்ஸ் ஒரு பிரசங்கம் செய்தார்.

டிசம்பர் 9.—அடுத்த வாரம் காமன்ஸ் சபையில் இரண்டு நாட்கள் யுத்த நிலைமையைக் குறித்தும் அந்நிய நாட்டு விஷயங்களைக் குறித்தும் விவாதம் நடைபெறுமென்று மிஸ்டர் அட்லி தெரிவித்தார்.

சர்வதேச ஆதிக்கம் சம்பந்தமானதோர் ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டு சர்வதேச சங்கப் பொது கௌன்சில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

டிசம்பர் 10.—லண்டனைத் தாக்கிய எதிரி விமானங்களில் 4 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

சென்ற நவம்பர் மாதத்தில் ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களை நாசஞ்செய்த போராட்டத்தைக் குறித்து இன்றொரு கூட்டறிக்கை வெளியானது.

டிசம்பர் 11.—அமெரிக்க விமானங்கள் 138 எதிரி விமானங்களையும் நாசஞ் செய்தன.

பான் ரிப்பன்ட்ராப் ஒரு வானொலி பிரசங்கம் செய்தார்.

டிசம்பர் 12.—இந்த மழை காலத்திலும், அதற்கடுத்த வசந்த காலத்திலும் ஜெர்மானியர்கள் மகா கடுமையானதோர் நிலைக்கு உள்ளாகப் போகிறார்களென்று அமெரிக்க விமானப் படைத் தலைவரான ஜெனரல் ஹென்றி எச். ஆர்னால்ட் குறிப்பிட்டார்.

டிசம்பர் 13.—கிருஸ்மஸ் விழாவன்று மன்னர் பிரான் ஒரு வானொலிப் பிரசங்கம் செய்வார்.

டிசம்பர் 14.—இன்று மன்னர் பிரான் பிறந்த நாள்.

மிஸ்டர் ஈடன் காமன் சபையில் யுத்த நிலைமையைக் குறித்து விளக்கிப் பேசி, விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

டிசம்பர் 7.—ஆங்கிலோ-அமெரிக்கத் தலைமையை யொட்டித் தான் உலக அமைதி ஏற்படுமென்று அமெரிக்கக் கடற்படை மந்திரி கர்னல் நாக்ஸ் கூறினார்.

ஐரோப்பாவைத் தாக்குவதைக் குறித்துத் திட்டமிட வேண்டி, லண்டனுக்கும் வாஷிங்டனுக்கும், ஸ்டாலின்கிராட் வீரரான மார்ஷல் வார்ஷிலோங் இராணுவத் தலைவர்களைக் கலந்து பேசும் பொருட்டுப் போவார்.

"விஸ்கான்சின்" என்னும் மகத்தான புதிய அமெரிக்கப் போர்க் கப்பல் இன்று கடலில் இறக்கப்பட்டது.

டிசம்பர் 8.—ஏராளமான எ.·.கு தேவையென்று நேற்றிரவு யுத்த உற்பத்தி போர்டார் கோரியிருக்கிறார்கள்.

டிசம்பர் 9.—பெர்ல் துறைமுகத்தை ஜப்பானியர்கள் தாக்கியது சம்பந்தமாக, ரியர் அட்மிரல் எச். கிம்மலும், லெப்டினெண்ட் ஜெனரல் வால்டர்-சி-ஷாட்டும் இராணுவக் கோர்ட்டில் விசாரணைக்குக் கொண்டுவரப்படும் தேதியை 6 மாத காலம் தள்ளி வைக்க அமெரிக்க செனட் சபை அனுமதித்திருக்கிறது.

நேச நாடுகளின் கடமைகளைக் குறித்து யுத்த மந்திரி மிஸ்டர் ஹென்றி ஸ்டிம்சன் ஒரு அறிக்கை விடுத்தார்.

டிசம்பர் 11.—வட அட்லாண்டிக் சமுத்திரத்தில், ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் 5 மூழ்கடிக்கப்பட்டன. 3 சேதப்பட்டன.

டிசம்பர் 12.—வரிகளை உயர்த்தும்படி நேருமென்று அமெரிக்க நிதி மந்திரி கூறினார்.

டிசம்பர் 13.—கெய்ரோவுக்கும், டேரானுக்கும் போய்த் திரும்பும் வழியில் மிஸ்டர் ரூஸ்வெல்ட் சிசிலியில் இறங்கினார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

டிசம்பர் 8.—கெய்ரோவிலிருந்து திரும்பிய மார்ஷல் ஷியாங்-கெய்-ஷேக் இந்தியாவிற்கு வந்து, லூயி மௌண்ட் பாட்டன் பிரபுவைக் கண்டு பேசிவிட்டுப் போனதாகத் தெரிகிறது.

டிசம்பர் 9.—தென் கிழக்காசியப் போர்த் தலைவரான லூயி மௌண்ட் பாட்டன் பிரபுவுக்கும் தென் மேற்குப் பசிபிக் போர்த் தலைவரான ஜெனரல் மெக்கார்தருக்கும் தொடர்பமைப்பது பற்றி, லூயி மௌண்ட் பாட்டன் பிரபுவும், ஜெனரல் மெக்கார்தரின் பிரதம உத்தியோகத் தலைவரான மேஜர் ஜெனரல் ரிச்சர்ட் கே. சதர்லாண்டும் டில்லியில் கலந்து பேசினார்கள்.

டிசம்பர் 11.—மேன்மை தங்கிய வைசிராய் பிரபு கட்டாக்குக்கு விஜயம் செய்தார்.

டிசம்பர் 13.—தாக்குதல் போராட்டத்திற்கு இந்தியா எந்த அளவிற்கு ஆயத்தங்கள் செய்திருக்கிறதென்று மேன்மை தங்கிய இந்தியப் படைத் தலைவர் ஒரு வானொலிப் பிரசங்கம் செய்தார்.

கஞ்சம் ஜில்லாவில் வெள்ளத்தினால் நிர்க்கதியானவர்களுக்கு உணவளிக்கப்படும் உணவுச் சாலையை மேன்மை தங்கிய வைசிராய் தம்பதிகள் பார்வையிட்டனர்.

வட கிழக்கு அஸ்ஸாமிலுள்ள ஒரு விமானக் கூடத்தை ஜப்பானிய வெடிகுண்டு விமானங்கள் தாக்கின. இரண்டு ஜப்பானிய வெடிகுண்டு விமானங்களும் 5 போர் விமானங்களும் நாசமாக்கப்பட்டன.

ரஷ்யாவும் பின்லந்தும்.

டிசம்பர் 7.—ஸ்னெமென்காவிற்கு வட பகுதியிலுள்ள ஜெர்மன் அரண்களைத் துளைத்துக் கொண்டு சோவியத் படைகள் புகுந்துவிட்டன.

டிசம்பர் 8.—குலொகோப்கா, பண்டியெப்கா இவ்விரண்டையும் ரஷ்யப் படைகள் கைப்பற்றி விட்டன.

டிசம்பர் 9.—ஸ்னெமென்காவையும், மெடிரபோவையும் ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

டிசம்பர் 10.—க்ரிகராய் ராக்குக்குப் போகும் பாதையிலுள்ள கிரோப்ஸ்கா முதலிய பல இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

டிசம்பர் 11.—நோப்கோவல்கா வை சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

டாக்டர் பினேஷ் மாஸ்கோ வந்து சேர்ந்தார்.

டிசம்பர் 12.—சிகிரின் என்னு மிடத்தை சோவியத் படைகள் கைப்பற்றின.

சோவியத்-செக் ஒப்பந்தம் கையெழுத்தானது.

டாக்டர் பினேஷுக்கு தோழர் கலினின் அளித்த விருந்துக்கு மார்ஷல் ஸ்டாலின் விஜயம் செய்திருந்தார்.

டிசம்பர் 14.—ஜெனரல் இவான்ஸ் கோனெப் தலைமையிலுள்ள படைகள் செர்க்காசியைக் கைப்பற்றின.

கியெப் வளையில் ஜெர்மானியர்கள் மீண்டும் திரண்டு கொண்டிருக்கிறார்கள்.

யூகோஸ்லாவியாவிற்கு ஒரு இராணுவக் கோஷ்டியை யனுப்புவதென்று சோவியத் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

டிசம்பர் 7.—பெரு மழையையும் பொருட்படுத்தாது, மோகோ ஆற்றை 8-ம் படை கடந்து விட்டது. 5-ம் படையும் சிறிது முன்னேறியது.

எலூசிஸ் கொலமாகி ஆகிய இடங்களிலுள்ள விமானக் கூடங்களை வடாப்பிரிக்க விமானப் படை தாக்கியது.

சென்ற திங்கட்கிழமை ஜெனரல் ஸ்மட்ஸ் கெய்ரோவுக்கு வந்து மிஸ்டர் ரூஸ்வெல்டுடன் கலந்து பேசியதாகத் தெரிகிறது.

டிசம்பர் 8.—காமினோ, கொகொருசோ, அக்குபென்டுலா, மக்ரோர் மலையின் மேல் சாரல் ஆகியவற்றை 5-ம் படை பிடித்தது.

டிசம்பர் 10.—வானிப்ரோவிற்குத் தென் மேற்கே யுள்ள முக்கியமான மலை யுச்சிகளை 5-ம் படை பிடித்துக் கொண்டது.

கெய்ரோவில் மிஸ்டர் சர்ச்சில் பத்திரிகைப் பிரதி நிதிகளுக்குப் பேட்டி கொடுத்து சமீபத்தில் நடைபெற்ற மகா நாடுகளைக் குறித்துப் பேசினார்.

டிசம்பர் 11.—சான்லியனார்டோ என்னுமிடத்தை 8-ம் படை கைப் பற்றிக் கொண்டது.

சாங்ரோ ஆற்றைக் கடப்பது முதலிய பல போராட்டங்களில் 15-வது பஞ்சாப் பட்டாளம் பங்கு கொண்டது.

மொசொக்ராக் என்னும் கிராமத்தை 5-வது கூர்க்கத் துப்பாக்கிப் படை கைப்பற்றியது. வங்காள ஈட்டிப் படையும் சாங்ரோ ஆற்றைக் கடந்தது. இவை எல்லாம் 8-ம் படையோடு சேர்ந்திருந்து போராடின.

மூன்று அச்சு நாடுகள் ஒப்பந்த ஆண்டு விழாவை முன்னிட்டு முசோலினி ஒரு பிரசங்கம் செய்தார்.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரிகள் வயப்பட்ட நாடுகள்.

டிசம்பர் 8.—வைஸ் அட்மிரல்கள் காட்ப்ரேயும், திச்சலியரும் தம் பதவிகளிலிருந்து விலகிக் கொண்டார்கள்.

டிசம்பர் 12.—லட்சக் கணக்கான முஸ்லீம்கள் உடனடியாக பிரஞ்சுப் பிரஜா உரிமைகளைப் பெறுவார்களென்று ஜெனரல் டி கால் அறிவித்தார்.

மீண்டும் பிரான்சு தலை தூக்கும் என்று ஜெனரல் டி கால் ஒரு கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

டிசம்பர் 13.—லெபனான் அரசாங்கமும் சிரியா அரசாங்கமும் தாம் எந்த புதிய முறையை மேற்கொள்ள வேண்டுமென்பது பற்றி ஒரு முடிவு செய்து கொண்டன.

நடு நிலைமை நாடுகள்.

டிசம்பர் 7.—சென்ற 4, 5, 6 தேதிகளில் மிஸ்டர் சர்ச்சிலும், மிஸ்டர் ரூஸ்வெல்ட்டும், தலைவர் இனோனுவும் கெய்ரோவில் தம் தம் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சகிதம் சந்தித்துக் கலந்து பேசினார்களென்று அறிவிக்கப்படுகிறது.

துருக்கியில் ஜெர்மன் ஸ்தானீகராயிருக்கும் பான் பேபன் துருக்கி முதன் மந்திரி சரோஜோக்லுவுடன் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

டிசம்பர் 9.—துருக்கியின் அன்னிய நாட்டுக் கொள்கையைக் குறித்து அன்னிய நாட்டு மந்திரி மெனெமென்சியோக்லு ஒரு அறிக்கை விடுத்தார். அச்சு நாட்டுப் பத்திரிகா நிருபர்களுக்குப் பேட்டி கொடுத்து கெய்ரோ மகா நாடு சம்பந்தமாக அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு விடையளித்தார்.

டிசம்பர் 10.—துருக்கி-பல்கேரிய எல்லைப்புரம் மூடப்பட்டுவிட்டதாகவும், ஜெர்மன் படைகளும் துருக்கிப் படைகளும் அங்கே கைகலந்ததாகவும் சொல்லப்படுகிறது.

டிசம்பர் 12.—பலமான ஆதிக்க மிக்கதோர் குடியரசாக அமைய வேண்டுமென்பது தான் துருக்கியின் நோக்கமென்று, துருக்கி பிரதம மந்திரி தன் வானொலிப் பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.

தூரக் கிழக்கு நாடுகள்.

டிசம்பர் 7.—சாங்டாவை ஜப்பானியர் கைப்பற்றி விட்டனர் என்று சீனப் படைத் தலைவர் ஒப்புக் கொள்ளுகிறார்.

டிசம்பர் 8.—மார்ஷல் தீவுகளை அமெரிக்கப் படைகள் தாக்கி, 6 எதிரிக் கப்பல்களை மூழ்கடித்து 6 விமானங்களையும் நாசஞ் செய்தன.

நேச நாட்டுத் தாக்குதலைச் சமாளிக்கத் தன்னால் முடியுமென்னும் உறுதியோடு, டோஜோ ஒரு வானொலிப் பிரசங்கம் செய்தார்.

டிசம்பர் 9.—சாங்டாவை சீனர்கள் மீண்டும் கைப்பற்றி விட்டனர்.

டிசம்பர் 10.—வாரியோவை ஆஸ்திரேலியப் படைகள் கைப்பற்றின.

டிசம்பர் 14.—டோக்கியோ வானொலி நிலையத்திலிருந்து யுத்த நிலைமை பற்றி விமரிசனம் செய்த ஒருவர், நேச நாடுகளுக்கு வற்றாத ஆற்றலுண்டு என்றும், இந்த யுத்த நிலைமையைப் பூரணமாகச் சமாளிக்கக் கூடிய ஆற்றல் ஜப்பானிய கப்பற் படைக்குண்டு என்று சொல்ல முடியாதென்றும் குறிப்பிட்டார்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.